# சிரிக்க சிந்திக்கச் சிறுவர் கதைகள்




புலவர். த. கோவேந்தன்

# சிரிக்க சிந்திக்கச் சிறுவர் கதைகள்

புலவர். த. கோவேந்தன், டி.லிட்.,

ஜெயகுமார் பப்ளிகேஷன்ஸ்,
1-A, 7வது தெரு, பக்தவச்சலம் நகர்,
பழவந்தாங்கல், சென்னை - 600 114.

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சிரிக்க சிந்திக்கச் சிறுவர் கதைகள் |
| ஆசிரியர் | : | த. கோவேந்தன், டி.லிட்., |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாளர் | : | நா. பாலகிருஷ்ணன் |
| பொருள் | : | சிறுவர் இலக்கியம் |
| உரிமை | : | பதிப்புரிமை பெற்றது |
| முதற்பதிப்பு | : | நவம்பர் 14, 1997 |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரௌன் |
| நூல் வெளியீடு | : | ஜெயகுமார் பப்ளிகேஷன்ஸ்<br>1-A, 7வது தெரு, பக்தவச்சலம் நகர்,<br>பழவந்தாங்கல், சென்னை - 600 114. |
| எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 122 |
| பேப்பர் | : | 10.7 வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | : | சாதா அட்டை பைண்டு |
| விலை | : | ரூ.25.00 |
| ஒளியச்சு | : | லேசர் இம்ப்ரெஷன், சென்னை - 30. |
| ஓவியம் | : | ந. ரவி |
| மறுதோன்றி | : | வசந்தா ஆப்செட், சென்னை - 5. |

# பதிப்புரை

தெனாலிராமன் கதை, மரியாதை ராமன் கதை போன்ற பற்பல நகைச்சுவை நறுக்குகள் நானிலத்திலும் உள்ளன. அவற்றைத் தேடி எடுத்துக் கொடுப்பதில் ஒரு சிலரே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று நாள்தோறும் உலக மொழிகளிலே விழி வைத்துப் பார்க்கின்றனர். அவர்களுள் ஒருவரே நம் புலவர் த. கோவேந்தன். அவர்கள் தொகுப்பு சீனா, ஜப்பான் நாட்டு நகைச் சுவை நறுக்குகள், துணுக்குகள் இங்கே உங்கள் கையில் அமர்ந்து சிரிக்கின்றன; சிந்திக்க வைக்கின்றன.

பெற்றோர்களும், ஆசிரியர்களும் தாம் கற்பது மட்டுமின்றி தம் பிள்ளைகட்கும் தம் மாணவர்கட்கும் இந் நூலைத் தந்து சிரித்து மகிழ்ந்து வாழட்டும்.

இவண்,

நா. பாலகிருஷ்ணன்

# என்னுரை

மக்களாகிய நமக்கே சிரிக்கத் தெரியும். நண்பர்கள், உற்றார் உறவினர்கள் எல்லோருடனும் கலகலப்பாகச் சிரித்துப் பேசி மகிழ்வது போன்ற ஓர் இன்பம் வேறு இல்லவே இல்லை.

எப்போதும் சிரித்துக் கொண்டிருப்பவர்கள் தப்பேதும் இல்லாத மனம் உடையவர்கள். மனம் இறுக்கம் இருந்தால், மனக்கவலை தோன்றும். மனக்கவலைக்கு மருந்து நகைச்சுவையாகும். அந்த நகைச்சுவை அன்பில் முகிழ்விப்பது. அது நம்மைச் சூழ்ந்த அனைத்து நிகழ்ச்சிகளிலும் உள்ளது. நம் நடிப்புகளே சொற்களே செயல்களே நம்மையும் நானிலத்தையும் சிரிக்க வைக்கும் பாங்குடையன. உள்ளம் உரை செயல்களில் ஓங்கிய நகைச்சுவை நறுக்குகளே இந் நூல் தொகுப்பு. படித்து நகையுங்கள். எல்லாப் பகையையும் வெல்லுங்கள். வாழ்க்கைத் திருவிழாவில் தொகை தொகையாய் இன்பம் பெருகும். துன்பம் அருகும்.

உலக நாடக மேடையில் நாம் விலைவாணராகவும் கொலைவாணராகவும் நடிப்பதை விடக் கலைவாணராக வாழ்வோம்.

அன்பன்

-த.கோவேந்தன்

## 1. தீர்மானம்

ஒருவருக்கு ஒருவர் ஒத்துப் போகாத தந்தையும் மகனும் இருந்தனர். ஒரு நாள் தந்தை விருந்துக்கு ஒருவரை அழைத்திருந்தார். எனவே விருந்தினர்காகக் கறிவாங்கி வரும்படி மகனைப் பக்கத்துப் பட்டணத்திற்கு அனுப்பி வைத்தார். கறியினை வாங்கி வரும்போது பட்டணத்து வாயிலில் தன்னை நோக்கி ஒருவர் நடந்து வருவதைக் கவனித்தான் மகன். எதிரும் புதிருமாக வந்த அவர்கள் இருவரும் ஒருவர்க்கொருவர் வழிவிட்டு விலகாமல் அந்தக் குறுகிய வாசலில் நெடுநேரம் நின்றனர்.

பட்டணம் சென்று நெடுநேரமாகியும் திரும்பி வராத மகனைத் தேடித் தந்தை வந்தார். மகனைப் பட்டணத்து வாயிலில் கண்டார் தந்தை. கண்டதும் சொன்னார். "கறியை எடுத்துக் கொண்டு நீ வீட்டிற்குபோய் விருந்தினரோடு இரு. உனக்குப் பதிலாக இந்த மனிதனை நான் இங்கு எதிர்த்து நிற்கிறேன்.

## 2. திடீர்ப் பணக்காரன்

வறியவன் ஒருவன் பணம் படைத்தவன் ஆனான். வந்த வாழ்வில் முந்தியதை மறந்தான். ஒரு நாள் காலைத் தன் வீட்டைச் சுற்றியிருந்த தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு, வீட்டிற்குள் சலிப்போடு நுழைந்தான். சலிப்புக்குக் காரணம் கேட்டாள் மனைவி. "தோட்டத்திலுள்ள மலர் களைப் பார்வையிடும்போது, செம் மலரிலிருந்து ஒரு பனித் துளிப்பட்டு நனைந்துவிட்டேன். பனிக் காய்ச்சல் வந்து விடக்கூடாது உடனே மருத்துவரைக் கூப்பிடு" என்றான்

அவன். "நாம் இருவரும் பிச்சைக்காரரர்களாய்ச் சந்தித்த அந்தக் கசப்பான நிகழ்ச்சியை நீங்கள் மறந்து விட்டீர்களா? அன்றிரவு முழுவதும் கொட்டிய மழையில் ஒதுங்க இட மின்றி ஒரு மூங்கில் புதரில் நனைந்த வண்ணம் நின்று கொண்டிருந்தோம். அதைவிடவா இப்போது அதிகம் நனைந்துவிட்டீர்கள்? என்று கேட்டாளே ஒரு கேள்வி, அவன் மனத்தில்படும்படி.

## 3. ஒற்றை ஆடை அறிஞர்


அறிஞர் ஒருவர் உடுத்திக் கொள்ள ஆடை ஒன்றே ஒன்றினையே வைத்திருந்தார். அந்த ஆடையையும் துவைக்க நேர்ந்ததால், அம்மணமாகவே படுக்கையில் அவர் படுத்துக் கொள்வார். ஒருமுறை ஆடையை அவ்வாறே துவைத்து உலர வைத்துவிட்டுப் படுக்கைக்குச் சென்று அம்மணமாய் படுத்துக் கொண்டார். அந்த நேரம் பார்த்து அறிஞரைக் காண ஒருவர் வந்தார். அறிஞரைக் காணது அவ ருடைய மகனிடம் "அப்பா எங்கே! என்றார். "படுக்கையில்" என்றான் மகன் "உடம்புக்கென்ன? நலக்கேடா?" வந்தவர் கேட்டார். "உடுக்க ஒன்றுமில்லை என்று படுக்கையில் படுத்துக் கொண்டால், நலக்கேடு என்றா பொருள்?" வந்தவ ரிடம் விளக்கம் கேட்டான் மகன்.

## 4. வறிய விருந்தினன்

வறியவன் ஒருவன், பணம் படைத்த உறவினர்கள் வீட்டில் விருந்தொன்றுக்கு அழைக்கப்பட்டான். விருந்திற்கு அணிந்து செல்ல. அழகிய உயர்ந்த ஆடையில்லாததால் பஞ்சில் நெய்ந்த மெல்லிய ஆடையொன்றை அணிந்து

சென்றான். தன் ஆடையைக் கண்டு பிறர் எள்ளி நகைப்பர் என்றெண்ணிய விசிறியொன்றைக் கையிலெடுத்து விசிறிய வண்ணம் "இயல்பாகவே கோடை வெப்பம் என்றால் எனக்கு மிகுந்த வெறுப்பு, எனவே வாட்டும் குளிர்காலத்தில் கூட விசிறியால் விசிறிக்கொள்வேன்" என்றான்.

வறியவனின் இந்தப் போலி நாடகத்தை வெளிப்ப டுத்த திட்டமிட்டான். விருந்து கொடுத்தவன். விருந்தின் முடிவில் எல்லோரும் உறங்கப் படுக்கைகள் பாதுகாப்பான உள் அறைகளில் அணியமாயின. இந்த வறியவனுக்கு மட்டும் வீட்டின் முகப்பிலுள்ள குளத்தின் அருகில் திறந்த வெளித் திண்ணையொன்றில் மெல்லிய படுக்கை விரிக்கப் பட்டு அதில் புல்லினால் செய்த தலையணை வைக்கப்



பட்டது. பின்னர் போர்த்திக் கொள்ளப் போர்வையேதுமின்றி வறியவனைப் படுக்கச் செய்தான். பக்கத்தில் நின்று நடக்கப் போகும் வேடிக்கையைக் காணத் துடித்துக் கொண்டிருந்தான் விருந்து கொடுத்தவன்.

குளிர்தாங்க மாட்டாமல் நள்ளிரவில் படுக்கையிலிருந்து எழுந்தான் வறியவன். படுக்கை விரிப்பையெடுத்துப் போர்த்திக் கொண்டு தப்பிச் செல்ல முனைந்தான். பரபரப்பில் படுக்கை விரிப்புத் தட்டி அருகிலிருந்த குளத்தில் விழுந்து விட்டான்.

இந்த வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த விருந்து கொடுத்தவன் "என்ன நடந்தது?" என்று ஒன்றுமறியாதவன் போல் கேட்டான். "வெப்பத்தின் மீது எனக்குள்ள வெறுப்புத்தான்; வேறொன்றுமில்லை. திறந்த வெளித் திண்ணையில் தான் எனக்கு நீங்கள் படுக்கைப் போட்டீர்கள் என்றாலும் உங்கள் குளத்தில் குளித்துவிட்டுத்தான் தூங்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம் என்று பக்குவமாக விடையளித்தான் வறியவன்.

## 5. விண்ணகப் படிக்கட்டுகள்

மாமனாருடன் மருமகன்கள் உணவு உண்ணும் போதெல்லாம் அவனுக்கு ஒரு ஒதுக்குப்புறமான இருக்கையே கிடைத்தது. இதனால் அவமானமுற்ற அவன் மனைவி. ஒருநாள் மதிப்புமிக்க இருக்கையில் கௌரவமான ஆசனத்தில் எல்லோருக்கும் முன்னதாக ஓடிச் சென்று அமரும்படி தன் கணவனுக்கு ஆய்வுரை கூறினாள். ஆனால் அந்த ஆய்வுரையை அவன் முற்றுமாகப் புரிந்து கொள்ளவில்லை.

பின்னர் ஒருமுறை அவன் தன் மனைவியுடன் தன் மாமனார் இல்லம் சென்றபோது, விருந்தினர்கள் இருக்கையில் அமரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். உடனே அந்த இளைஞனின் மனைவி, அவனைத் தலைமை இருக்கைகுச் சென்று அமரும்படி சைகை செய்தாள். அவள் கணவனோ இருக்கைகளின் உயரத்தில் வேறுபாடு இருப் பதைக் கண்டான். அத்துடன் ஏணிப்படி ஒன்று உணவுக் கூடத்தில் இருப்பதைக் கவனித்தான். ஒரே ஓட்டமாக ஓடி அந்த ஏணிப்படிகளில் விரைந்து ஏறி பாதிப் படிகளைக் கடந்தான். இதனைக் கண்ட அவன் மனைவி அவனை முறைத்துப் சினத்துடன் பார்த்தாள். ஆனால் அவள் பார்வையின் பொருள் புரியாதபடி, "எவ்வளவு உயரம் ஏற வேண்டும் என்று நீ விரும்புகிறாய்; விண்ணகத்தை எட்டிப் பிடிக்கும் மட்டுமா? "என்று அவன் உரத்த குரலில் கேட்டான். செய்வதறியாது. திகைத்தாள் அவன் மனைவி.

## 6. பிழைப்புக்கு ஒருவழி தேடு

பிறர் தன்னை வாயாரப் புகழ்வதைக் கேட்க விரும் பினான் ஒருமனிதன். அவனின் இந்த இயல்பை அறிந்த ஒரு மனிதன் அவனைப்பற்றி அவன் முன்னிலையில் புகழ்ந்து பேசினான். அவன் சொன்னான், "வாழ்நாளெல்லாம் செல்வச் செழிப்புடன் நீ வாழ்வாய் என்பதை உன் கண்கள் சொல்கின்றன" என்றான். இதனைக் கேட்டுக் கிறுகிறுத்துப் போன அந்த புகழ் விரும்பி அந்த மனிதனைப் பல நாள்கள் தன் வீட்டில் விருந்தினனாக வைத்து ஓம்பிப், பின் விலை யேறப் பெற்ற பொருள்களைப் பரிசாகக் கொடுத்தான். பிரிந்து செல்லும்போது அந்த மனிதன் புகழ் விரும்பியிடம்

"நீங்கள் ஒரு தொழில் புரிய வேண்டும். ஓரிணைக் கண்களைக் கொண்டு ஒரு மனிதனின் எதிர்காலம் முழுமையையும் கணித்து விடமுடியாது" என்றான் அந்த மனிதன்.

## 7. நாமெல்லாம் ஒன்று

ஒருமுறை அறிஞர் ஒருவர் "இயற்கைப் படைப்புகள் அனைத்தும் ஒன்றே" என்ற மெய்மை விளக்கம் தந்து கொண்டிருந்தார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு படித்த மேதை "பகுத்தறிவு கொண்ட ஒரு மனிதன் கடற் பூதங்களையும்; புலிகளையும் அடக்கியாள முடியுமா?




நாமெல்லாம் ஒன்று என்பதால் ஒருவன் புலியின்மீது சவாரி செய்யுமுடியுமா?'' என்று கேட்டான்.

இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த 'செந்தேள்' பலமாகச் சிரித்தார். 'புலியின் முதுகில் மேலேறிச் செல்வது, இரண்டு உடல்களுக்கிடையே வேறுபாடு உண்டு என்பதைக் காட்டுகிறது. ஆனால் ஒரு மனிதன் புலியால் விழுங்கப்பட்டுவிட்டால் அவர்கள் இருவரும் ஒன்றே'' என்றார். இதனைக் கேட்டு அனைவரும் கலைந்து சென்றனர்.

## 8. குடியை மட்டுப்படுத்தல்

'நான்மாடத்தைச் சார்ந்த 'சிற்றரசு' மதுவை நேசித்தான். சாத்தூரில் அவன் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டபோது, அவன் தனது மிதமிஞ்சிய குடிப்பழக்



கத்தால், கிடைத்த பதவியை இழந்துவிடுவான் என்று அவன் தந்தை உணர்ந்தார். எனவே அத்தகைய மிதமிஞ்சிய குடியைத் தவிர்க்கும்படி மகனுக்கு அறிவுரை வழங்கி ஒரு மடல் எழுதினார்.

அறிவுரையின் விளைவாக மகன் சிற்றரசு, தன் முதல் மாத ஊதியத்தில் பெரிய அளவிலான தங்கக் கோப்பை ஒன்றினைச் செய்தான். அக் கோப்பையில் "தந்தையின் மொழிகளை மறவாதே. ஒரு முறைக்கு மூன்று கோப்பைக்குமேல் அருந்தாதே" என்று பொறித்து வைத்தான். இச் சொற்றொட பின்னர் அப் பகுதிமக்களிடையே பொதுமொழியாப் பழமொழியாய் மாறிற்று.

## 9. உள்ளுணர்வினால் உண்டாகும் உவகை

பாண்டியனார் ஓர் அறிஞர். மாலைநேரங்களில் 'மணி என்பவரின் இல்லம் சென்று அவர்களுக்குப் பாடங்கள் கற்பித்து வந்தார். இவர் கவிதையெழுதுவதிலும் நாட்டம் மிக்கவர். ஒருநாள் இரவு திருமணி அவர்களின் இல்லத்தில் இரவு உணவருந்திவிட்டுத் தன் வீடு திரும்பினார் அறிஞர். முன்னிரவு நேரம் அது. முழுநிலவு வானில் பவனி வந்து கொண்டிருந்தது நிலவைக் கண்டார். கவிபாடும் ஆவல் கொண்ட அறிஞர். உணர்ச்சி பொங்கப் பாடினார்.

"கையில் தவழும் அமுதக் கலசத்திற்கு நிகர் ஏதுமில்லை; எனெனில் ஆண்டொன்றிற்கு எத்தனை முறைகள் அழகு நிலவை நம் தலைக்குமேல காண முடியும்?"

என்ற கவிதையை வடித்தார். கட்டுக்கடங்கா மகிழ்ச்சி கண்டார்; ஓடிச் சென்று தன் வீட்டுக் கதவைத் "பட பட" வென்று தட்டினார். தனது வீட்டு முதலாளியை எழுந்து வரும்படி அபயக்குரல் எழுப்பினார். அறிஞர் போட்டக் கூச்சலில் வீட்டிலுள்ள அனைவரும் திருடோ தீவிபத்தோ ஏற்பட்டிருக்கிறது. என எண்ணி அலறியடித்து பரபரப்பாக எழுந்து வந்தனர். அறிஞர் எதற்காக அலறினார் என்பதைப் புரிந்து கொண்ட வீட்டு முதலாளி, "நன்று அப்படியானால் நாம் மது அருந்தலாம்; வாருங்கள்" என்று அறிஞரை உள்ளே உணவுக் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார்.

## 10. தள்ளுதல் முன்னொரு காலத்தில்

சேர மாநிலத்தைச் சேர்ந்த ஒரு மனிதன் சிறந்த நீச்சல் வீரனாய்ப் புகழ் பெற்று விளங்கினான். ஒருநாள் அவன் மனைவி ஒரு வயதே நிரம்பிய குழந்தையொன்றினை நீரில் மிதக்க விட்டுக் கொண்டிருப்பதை அவ் வழியாய்ச் சென்ற ஒருவன் கண்டு, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்ட போது, அவள் பெருமையுடன், "நன்று; அவன் தந்தையைப் போலவே இவனும் சிறந்த நீச்சல் வீரனாக வேண்டாமா?" என்று கேட்டாள். வந்தவர் வாய்பொத்தி அமைதியாகச் சென்றார்.

## 11. ஃ என்று அடையாளமிட்ட இடம்

ஒருமுறை வீரன் ஒருவன் ஆற்றைக் கடக்கப் படகில் சென்றான் செல்லும் வழியில் அவன் உடைவாள் நழுவி நீரில் விழுந்தது. விரைந்து அந்த வீரன் வாள் விழுந்த

இடத்தைப் படகில் ∘ᵒ என்று அடையாளமிட்டான். படகு கரை சேர்ந்தது. வீரன் உடனே படகில் ∘ᵒ அடையாளிட்ட இடத்துக்கு நேராக நீரில் இறங்கி வாளினைத் தேடினான்.

## 12. முரண்பட்ட இரண்டு தவறுகள்

பயனற்ற மகன் ஒருவன் தன் தந்தையின் விருப்பத் திற்கு மாறாகவே எப்போதும் செயல்பட்டு வந்தான். இதனை உணர்ந்த அவனின் தந்தை சாக்காட்டுப் படுக்கையில் இருக்கும்போது, தன் விருப்பத்திற்கு மாறாகத்தான், மகன் செயல்படுவான் என்று எண்ணி மகனிடம், "மகனே, நான் இறந்ததும் ஏதாவது ஓர் நீர் நிலையில் என் உடலை அடக்கம் (புதைத்து) செய்துவிடு" என்று வேண்டிக் கொண்டான்.

தன்னைத் தரையில்தான் தன் மகன் புதைப்பான் என்று மனத்தில் நினைத்துக் கொண்டார். ஆனால் அந்த உத வாக்கரை மகனோ, வாழும் போதுதான் நான் என் தந் தையின் விருப்பத்தை நிறைவேற்றத் தவறிவிட்டேன், அவர் இறந்த பிறகாவது நான் அவர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணி, அவர் இறந்ததும், தங்கள் சொந்த மண்ணில் ஒரு சிறிய குளத்தினை உருவாக்கி அதனுள் தன் தந்தையின் பிணத்தைப் போட்டுவிட்டான்.


## 13. அருமகள்

இளம் நங்கை ஒருத்தியை அவளின் அண்டை வீட்டு இளைஞர்கள் இருவர் மணந்துகொள்ள விரும்பினர். கீழை வீட்டுக்காரனின் (தன் கிழக்கேயுள்ள வீட்டுக்காரன்) மகன் செல்வன் மிகுந்தவன்; ஆனால் அழகற்றவன். மேலை வீட்டுக்காரனின் மகன் அழகன்; ஆனால் ஏழை. இருவரில்

யாரைக் தேர்ந்தெடுப்பது. பெண் வீட்டாருக்குக் குழப்பமாக இருந்தது. முடிவைப் பெண்ணின் விருப்பத்திற்கு விட்டு விட்டனர். ''இரண்டு இளைஞர்களையும் மணந்து கொள்கிறேன்'' என்றாள் மணப்பெண். ''கீழை (கிழக்கே உள்ள) வீட்டில் உண்ணுகிறேன்; மேலை (மேற்கேயுள்ள) வீட்டில் உறங்குகிறேன்'' என்று தன் முடிவுக்கு விளக்கமும் தந்தாள் அந்த நங்கை. அருமகள்.

## 14. உயர் அதிகாரியின் கடமைகள்

பிறர் பொருளை இச்சிக்கும் இயல்பும் கையூட்டுப் பெறும் பழக்கமும் கொண்ட உயர் அதிகாரி ஒருவர் இருந்தார். ஒருநாள் அவருடைய வேலைக்காரன் அவரின்



காலணிகள் நைந்திருப்பதை அவரிடம் சுட்டிக் காட்டினான். உடனே அந்த உயர் அதிகாரி, எப்போதும் புதிய காலணி களை அணியும் வேறு ஒரு சார்புப் பணியாளரை அழைத்து வரும்படி தன் வேலைக்காரனுக்கு ஆணையிட்டார். அவ்வாறே அவனும் அழைத்து வந்தான். வந்த அந்த சார்புப் பணியாளரை மரத்தில் ஏறி பழங்களைப் பறிக்கக் கட்டளை யிட்டார். அவனும் தான் அணிந்திருந்த புதிய அழகிய கால ணிகளை மரத்தின் அடியில் கழற்றி வைத்து விட்டு பழத்தைப் பறிக்க மேலே ஏறினான். அவன் மேலே சென்றதும் உயர் அதிகாரியின் வேலைக்காரன் கழற்றி வைத்த காலணிகளைக் தன் அதிகாரியின் ஆணைப்படி திருடிக் கொண்டு சென்றான். இதனைக் கண்ணுற்ற அந்தச் சார்புப் பணியாளர் மரத்தின் மேல் இருந்தவாறே தடுக்க முயன்றான் முடியவில்லை. கீழே இறங்கி வந்து உயர் அதிகா ரியிடம் அது பற்றி புகார் செய்தபோது, அந்த உயர் அதிகாரி "மற்றவர்களின் காலணிகளைக் காவல் காப்பது ஒரு மாவட்ட உயர் அதிகாரியின் கடமையன்று" என்றார்.

## 15. பிந்திவந்த சுவை உணவு

'மூலன்' என்பவர் 'சோழ' மரபினைச் சார்ந்த ஆளுநர் ஆவார். அமைச்சரின் செயலராக இருந்த அவருடைய மகன் அவருக்கு உணவளிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டி ருந்தார். ஆளுநருக்கு வெறுப்பு ஏற்படும்போதெல்லாம் அதற்குக் காரணமாக இருந்தவர்களுக்குச் சவுக்கடி தண்டனை வழங்குவது அவர் வழக்கம். ஒருநாள் அவரு டைய மகன் அவருக்கு வகை வகையான புதிய சுவையான உணவுகளைப் பரிமாறினார். ஆளுநர் மூலன் அன்று வயிறு


புடைக்கச் சாப்பிட்டார். அவரைச் சுற்றியிருந்தவர்களெல்லாம் யாரோ ஒருவர், அவரின் சவுக்கடி தண்டனைக்கு ஆளாகப்போகின்றனர் என்பதை ஊகித்து உணர்ந்தனர். வயிறு நிரம்பியதும் அத்தகைய சுவையான உணவினை இது வரை தனக்குப் பரிமாறிய குற்றத்திற்காகச் சவுக்கடி தண்டனை வழங்கினார் ஆளுநர் தன் மகனுக்கு.

## 16. சாட்டையினை ஆய

பல்லவர் ஆட்சி காலத்தில் 'மாமல்லன்' ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஒருமுறை அவர் ஆய்வுக்காகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த போது ஒரு புதர் அருகில் வந்தார். அங்கு அழகிய சாட்டைகள் இருப்பதைக் கண்டு அவற்றில் ஒன்றையெடுத்துச் சென்றார். அந்த சாட்டையை ஆய்ந்து பார்க்க ஒரு மனிதனை தேர்ந்தெடுத்தார். தேர்ந்தெடுத்த அந்த மனிதன், "நான் தவறு ஏதும் செய்ய வில்லையே" என்று முறையிட்டான். "இனி நீ எதிர் காலத்தில் தவறுகள் ஏதும் செய்ய நேரிட்டால், சாட்டை அடியிலிருந்து உனக்கு விதிவிலக்கு அளிக்கப்படும்" என்று வாக்குறுதியளித்தார் ஆளுநர். பின்னர் எதிர்பாராத வகையில் அவன் ஒருநாள் தவறு செய்ய நேர்ந்தது. அந்தத் தவறுக்காக அவன் சாட்டையடிக்கு ஆளானபோது ஆளுநரிடம் "ஐயா, முன்பே இந்த தவறுக்கு நான் சாட்டையடித் தண்டனை பெற்றுவிட்டேன்" என்று சொல்லி ஆளுநர் கொடுத்த வாக்குறுதியை நினைவு படுத்தினான். ஆளுநரோ "குற்றமற்றவனா யிருக்கும் போது நான் உனக்கு அந்த வாக்குறுதி தந்தேன். இப்போதோ நீ குற்றம் புரிந்திருக்கிறாய்" என்று சொல்லி அவனைச் சட்டையால் அடிக்கத் தொடங்கினார்.

# 17. மணமகன் தேவை

செல்வர் வீட்டு நங்கையருக்கு அரசுத் தேர்வில் வெற்றி பெற்ற சிறந்த இளைஞர்களை மணமகனாகத் தேர்வு செய்வதுண்டு. இப்படி தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களில் பலர் தங்கள் விருப்பத்திற்கு மாறாகவே இத்தகையத் திருமணங்களுக்குக் கட்டாயப்படுத்தப்பட்டனர். ஒருமுறை அழகிய படித்த இளைஞனைப் பெருமான் வீட்டுச் ஏவலன் தன் முதலாளி வீட்டிற்கு அழைத்துச் சென்றான். இளைஞனும் எவ்விதத் தயக்கமின்றி அவனுடன் சென்றான். வீட்டிற்குள் நுழைந்ததும் விலையுயர்ந்த ஆடையணிந்த ஒரு மனிதன் வீட்டின் உள்ளேயிருந்து வெளியே வந்து, இளைஞனிடம் "அழகும் அடக்கமும் நிறைந்த எங்கள் வீட்டுப்பெண் உம்மை மணமுடிக்க ஒப்புக்கொள்கிறாள்" என்றான்.



இளைஞனோ தலை வணங்கி அவனுக்கு வணக்கம் செலுத்திவிட்டு "எனக்கு இத்தகைய மேன்மையும் உயர்வும். தரப்பட்டமைக்கு மிக்க நன்றி. எனினும் நான் என் வீடு சென்று என் மனைவியிடம் ஒப்புதல் கேட்டு வருகிறேன்'' என்றான். இதனைக் கேட்ட அங்குக் குழுமியிருந்த அனைவரும் சிரித்த வண்ணம் கலைந்து சென்றனர்.

## 18. பாதிநாள் ஓய்வு

உயர்ந்த நிலையிலுள்ள ஒரு மனிதர் ஒரு முறை தாமரை மடத்திற்கு வருகை தந்தார். போதிய அளவு மது அருந்தியவுடன் கம்பர் காலத்துக் பாடல் ஒன்றைப் பாடத் தொடங்கினார். "மூங்கில் புதரின் வழியாய் செல்கையில் துறவியுடன் உரையாடினேன்; மற்ற வேளையில், பாதி நாள் ஓய்வில் இந்த நீந்தும் வாழ்வை மேற்கொண்டேன்'' என்று பாடினார். பாடலைக் கேட்டு, விருந்து கொடுத்த துறவி



சிரித்தார். அவர் சிரிப்பின் காரணம் கேட்டபோது அவர் சொன்னார். "உங்களுக்கு உண்மையில் அரை நாள் ஓய்வுண்டு. இந்த விருந்திற்காக நானோ மூன்று நாள் தொடர்ந்து ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறேன்" என்று.

## 19. காணமற்போன களைபிடுங்கி

உழவன் ஒருவன் கழனியில் தன் களையெடுப்பானை விட்டுவிட்டு வீடு திரும்பினான். களையெடுப்பான் எங்கே என்று அவன் மனைவி கேட்டாள். "மறந்து கழனியில் விட்டுவிட்டு வந்துவிட்டேன்" என்று உரக்கச் சொன்னான் உழவன். "உரக்கச் சொல்லாதீர்கள் யாரேனும் கேட்டால் அதனைத் திருடிச் சென்று விடுவர்" என்றாள். பின்னர் அடுத்தவர் சென்று திருடிச் செல்லுமுன், முந்திச் சென்று எடுத்து வாருங்கள்" என்றாள் மனைவி. அவனும் அவ்வாறே விரைந்து சென்று களைபிடுங்கியைத் தேடினான். களை பிடுங்கியோ காணமற் போய்விட்டது. வருத்தத்தோடு வீடு திரும்பினான். ஆவலோடு நின்றிருந்த மனைவியை அருகில் அழைத்தான். அவள் காதருகில் குனிந்து "அதனைக் காணவில்லை" என்று அக்கம் பக்கத்தினர் காதில் விழுந்துவிடாத வண்ணம் சொன்னான் அந்தப் பைத்தியக்காரன்.

## 20. அம்மணமாய் ஓர் அதிகாரி

கொடிய வெயில். பகலெல்லாம் உழைத்தப் பின் பொதுக்குளியல் அறைக்கு வந்தார், ஒரு கீழ்மட்ட அரசு அதி காரி ஒருவர். குளித்து முடித்தபின், தன் ஆடையையும்,

உள்ளாடையையும் யாரோ திருடிச் சென்றிருப்பதைக் கண்டார். குளியலறை மேலாளர் அந்த அதிகாரி வேண்டு மென்றே வேடிக்கை செய்வதாக ஐயப்பட்டார். பின்னர் அந்த அதிகாரி தன் தலைகவிப்பினை எடுத்துத் தலையில் அணிந்தார். பின்னர் காலணிகளையும் அணிந்தார். குளியலறை மேலாளரிடம் சென்று "இந்தக் கோலத்தில் நான் வெளியே நடந்து செல்ல வேண்டுமா?" என்று கேட்டார்.

## 21. மந்திரத் தாயத்து

கொசுக்கடியிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மந்திரவாதி ஒருவனிடமிருந்து 'தாயத்து' ஒன்றை வாங்கிக் கட்டிக் கொண்டான் பொன்னடி. தாயத்துக் கட்டியும் கொசுக் கடியிலிருந்து அவனால் தப்பமுடியவில்லை. கோபத்துடன் மந்திரவாதியிடம் சென்று தாயத்துத் தக்க பலன் அளிக்க வில்லை என்று முறையீடு செய்தான். மந்திரவாதியோ "தாயத்தை நீங்கள் தக்க இடத்தில் கட்டவில்லை. அத னால்தான் தப்பமுடியவில்லைக் கொசுக்கடியிலிருந்து," என்றான், "அப்படியானால் எங்கே கட்ட வேண்டும்?" என்று கேட்டான் அந்த மனிதன். "கொசு வலைக்குக் கீழே" என்றார் அந்த மந்திரவாதி.

## 22. உப்பு அதிகம்

இரண்டு உடன்பிறந்தவர்கள் சோறு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். இன்று சோற்றுடன் உண்ண என்ன குழம்பு என்று இருவருள் ஒருவன் கேட்டான். "இப்போது தான் அடுப்பில் கருவாடு சுடப்படுகிறது. சுடப்படும் கரு வாட்டை ஒருமுறை பாருங்கள், பின் ஒருவாய் சோற்றினை

உண்ணுங்கள்'' என்றார் தந்தை. சில நொடிகளில் ''அப்பா, அப்பா, ஒருவாய் சோற்றுக்கு அண்ணான் இரண்டு முறை கருவாட்டைப் பார்த்துவிட்டான் என்று தம்பி தந்தையிடம் முறையிட்டான். ''அதிக உப்பு அவனைக் கொன்றுவிடும்'' என்று எச்சரித்தார் பிள்ளைகள் மீது அக்கறை கொண்ட தந்தை.

## 23. பரிசுப் பொருளாகப் பழைய 'நாள்காட்டி'


புத்தாண்டு பிறப்பின்போது புத்தாண்டு பரிசினை ஒருவருக்கு மற்றொருவர் அனுப்பினார். அஞ்சல் காரனிட மிருந்து அப் பரிசினைப் பெற்றுக் கொண்ட வீட்டுக்காரர், அந்த அஞ்சல்காரனுக்குப் புத்தாண்டுப் பரிசாக தன் வீட்டில்



இருந்த பழைய நாள்காட்டியைக் கழற்றிக் கொடுத்தார். இதனைக் கண்ணுற்ற வீட்டு வேலைக்காரி அந்த பழைய நாள்காட்டியால் அந்த மனிதனுக்கு எந்தப் பயனும் இல்லை என்றாள். "எனக்கும் தான் அதனால் இனி எந்தப் பயனு மில்லை" என்று சொல்லியவாறு நாள்காட்டியை அஞ்சல் காரனிடம் கொடுத்தான் அந்த வீட்டுக்காரன்.

## 24. களவு

திருட்டுக் குற்றத்திற்காக மரக்கட்டையொன்றில் ஒரு மனிதன் பிணைக்கப்பட்டிருந்தான். அதனைக் கண்ட அவன் நண்பன் "என்ன நடந்தது?" என்று கேட்டான். அதற்கு அந்தத் திருடன் "இது எனது போகூழ்; அவ்வள வுதான். தற்செயலாக வீதி வழியே செல்லும்போது ஒரு சிறிய கயிற்றினைக் கண்டு கையில் எடுத்தேன்" என்றான்.



"இந்த அற்பச் செயலுக்காக யாரும் தண்டிக்க மாட்டார் களே" என்றான் நண்பன். திருடன் சொன்னான் "நான் எடுத்தக் கயிற்றின் மறுமுனையில் கன்று ஒன்று கட்டப்பட் டிருந்தது" என்று.

## 25. தடித்த படுக்கை விரிப்புகள்

கோடையில் கொசுவின் தொல்லை தாளாத ஒரு மனிதன் அதைப் பற்றி நண்பனிடம் முறையிட்டுத் தப்பிக்க வழி கேட்டான். அப்போது நண்பன் சொன்னான் "கனமான தடித்த படுக்கை விரிப்புக்கடியில் படுத்துக் கொள்" என்று. "ஏன்" என்று விளக்கம் கேட்டான் அந்த மனிதன். நண்பன் சொன்னான், "கொசுக்கள் உன்னைக் கடிக்க முனையும் போது படுக்கை விரிப்பு அசையும். அப்போது அசையும் விரிப்பில் கொசுவின் கொடுக்குகள் சிக்கி வளைந்துவிடும் படுக்கை விரிப்பில் சிக்கி வளைந்த கொடுக்குகள் குண மடைய 120 நாள்கள் ஆகும். அதற்குள் குளிர்காலமும் தொடங்கிவிடும்" என்று.

## 26. மாண்புமிகு அய்யா

கொள்ளையடிக்க கொள்ளையர்கள் ஒரு வீட்டில் நுழைந்தபோது, கொள்ளைக் கும்பலின் தலைவனின் மனத்தைக் குளிர்விக்க, "மேன்மைக்கு உரியவரே, தளபதி அவர்களே, விடுதலை வீரரே "என்றெல்லாம் போற்றித் துதித்தான் வீட்டுக்காரன். ஆனால் கொள்ளையர் தலை வனோ அவற்றுக்குச் சற்றும் மசியவில்லை. சோர்ந்து போன வீட்டுக்காரர், 'ஐயா தங்களை நாங்கள் எப்படி அழைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?' என்றார். அதற்கு அந்தக் கொள்ளைக் கூட்டத் தலைவன் "என்னை நீங்கள்

மாண்புமிகு அய்யா" என்று அழையுங்கள் என்றான். 'ஏன்?' என்று கேட்டபோது அவன் சொன்னான் "நம் நாட்டில் அரசுத் துறை பொறுப்பு அதிகாரிகள் அவ்வாறு தான் அழைக் கப்படுகிறார்கள்" என்று.

## 27. ஒரு நீர் முந்திரி மரம்

மலைவாசி ஒருவன் ஏரிகள் நிறைந்த ஏரி வட்டாரத் திற்கு வந்தான். நடந்து வந்த களைப்புத் தீர ஏரிக்கரையில் நின்ற ஒரு மரத்து நிழலின் ஓய்வுக்காக அமர்ந்தான். பக்கத்தில் ஒரு நீர்முந்திரி கிடப்பதைக் கண்டு, அதனையெ டுத்து உண்டான். அது மிகவும் அரிய சுவைமிகுந்திருப்பதை உணர்ந்தான். பின்னர் எழுந்து நின்று அந்த மரத்தின் தண்டி னையும் கிளைகளையும் உலுக்கினான். ஆனால் ஒன்றும் விழவில்லை. "இத்தனைப் பெரிய மரத்தில் ஒரே ஒரு முந்திரிப் பருப்புதானா?" என்று தனக்குள்ளே வியந்து கேட்டுக் கொண்டான்.

★குறிப்பு : நீர் முந்திரி என்பது நீருக்குள் படர்ந்து வளரும் ஒருவித முட்கொடி என்று அவன் அறியான். அவன் கரையில் நின்ற மரத்தை முந்திரிமரம் என்று நினைத்துக் கொண்டான்.

## 28. கடனைத் தவிர்க்க

கடன் வாங்கிய ஒருவன், ஏற்கனவே தனக்குக் கடன் கொடுத்தவனுக்குக் கடனைத் திருப்பிக் கொடுக்காமல், மேலும் கடன் வாங்கி அவனை ஏமாற்ற நினைத்தான். கடன் கொடுத்தவனிடம் அவன் "ஐயா, தற்போது நான் பணக்கார

விதவை ஒருத்தியை மணமுடிக்கப் போகிறேன். அவளுக்குத் திருமணப் பரிசு கொடுக்க என்னிடம் தற்போது போதிய பணம் இல்லை. தாங்கள் அந்தப் பணத்தைத் தந்து உதவினால், எங்கள் திருமணம் நடந்து முடிந்ததும் உங்கள் கடனைமட்டும் திருப்பித்தராமல், மேற்கொண்டும் நான் தங்களுக்குக் கடன் தந்து உதவுவேன்'' என்று ஆசைமொழிகளைச் சொன்னான். அவனது இந்த சொற்களை நம்பிய அவனும் கடன் கொடுத்தான்.

கடனைப் பெற்றுக் கொண்ட அந்த மனிதன் அதில் ஒரு பகுதியைக் கொண்டு தன் வீட்டைப் புதுபித்து,



வண்ணம் தீட்டினான். கடன் கொடுத்தவன் திருமணத்திற் காக ஏற்பாடுகள் நடக்கின்றன என்று நம்பும்படிச் செய்யவே இவ்வாறு செய்தான்.

சில நாள்களுக்குப்பின் அந்த வீட்டின் வழியாகக் கடன் கொடுத்தவன் சென்றான். பின் அவ் வீட்டு வாசலில் நின்று கடன் வாங்கியவன் இருக்கிறானா? என்று விசா ரித்தான். வீட்டின் உள்ளிருந்து "எனது கணவர் வெளியில் சென்றிருக்கிறார்" என்று பெண் குரல் கேட்டது. இவ்வாறே கடன் கொடுத்தவன் பல நாள் கடன் வாங்கியவனைத் தேடிச் சென்றான். ஒவ்வொரு முறையும் அதே பெண்குரல் வழக்கமான பதிலையே தந்தது. சந்தேகமுன்ற கடன் கொடுத்தவன் அந்த வீட்டின் கண்ணாடிப் பலகணி வழியாக உள்ளே எட்டிப்பார்த்தான். பெண்கள் யாரும் உள்ளே யில்லை. கடன் வாங்கியவனே தன் விரல்களால் மூக்கைப் பொத்திக் கொண்டு பெண் குரலில் அந்த விடையைச் சொல்வதைக் கண்டான். சினம் கொண்ட அவன் பலகணியை உடைத்து உள்ளே சென்று கடன் வாங்கிய வனை நையப் புடைத்தான். அப்போதும் அவன் அடியை வாங்கிய வண்ணம் "என் கணவர் கடன் வாங்கியதற்கு என்னை அடிக்கிறீர்களே?" என்று மூக்கைப் பொத்தியவாறு பெண் குரலில் மெல்லக் கேட்டான்.

## 29. பரபரப்பாக

சிற்றுண்டிச் சாலையை அடைந்ததுமே, "எனக்கு நான் கேட்ட பத்து முட்டை வறுவலை ஏன் இதுவரையிலும் தரவில்லை" என்று கேட்டான் ஒருவன். கடைக்காரனோ அவை ஓர் ஏனத்தில் கொண்டு வந்து கொடுத்து "விரைந்து


சாப்பிடு. ஏனத்தை நான் கழுவிவைக்க வேண்டும். விரைந்து; விரைந்து என்று துரிதப்படுத்தினான். இதனைக் கேட்டுச் சினத்தோடு அந்த மனிதன் வீடு திரும்பினான். நடந்ததைத் தன் மனைவியிடம் "நான் சினத்தில் தலை கீழாய்க் கவிழ்த்துவிட்டேன்; மிகவும் வேதனைக்குரியது அவன் செயல்" என்றான். இதனைக் கேட்ட அவன் மனைவி தன் கைப் பையை எடுத்துக் கொண்டு, "நன்று, நீங்கள் சாகப்போவது உண்மையானால் நான் மறுமணம் செய்து கொள்கிறேன்" என்றாள்.



இரண்டாவது கணவனுடன் ஓர் இரவு கழித்தப்பின், அவன் அவளை அனுப்பி விட்டான். ஏன் என்னை அனுப்புகிறாய் என்று அவள் அவனை கேட்டபோது அவன் சொன்னான் "நீ இப்போதே ஒரு மகனை ஈன்றெடுப்பாய் என்று எதிர்பார்த்தேன்" என்று.

## 30. என்னை ஆய்ந்து கொள்ளுங்கள்

மாவட்ட பொறுப்பு அதிகாரியிடம் தன் மாடு திருடு போய்விட்டதாக முறையீடு செய்தான் ஒரு மனிதன். அதிகாரி கேட்டார் "எப்போது?" என்று. "நாளை" என்றான் அந்த மனிதன். அதிகாரி அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தார். இதனைக் கவனித்த மாவட்ட அதிகாரி சட்ட அதிகாரியைப் பார்த்து "நீ தான் திருடியுள்ளாய். அப்படித்தானே?" அதை எங்கே மறைந்து வைத்திருக்கிறாய்?" என்று கேட்டார்.



அதற்கு அந்தச் சட்ட அதிகாரி தன் மேலாடையை உதறிக் காண்பித்து 'என்னை வேண்டுமானால் சோதித்துக் கொள்ளுங்கள்' என்றார்.

## 31. சிவப்புக்கால் சட்டை

ஆய்வுக்காகப் பயணம் மேற்கொண்டபோது அதிகாரி ஒருவர் வீதியில் ஓர் இளைஞன் மிகவும் பொறுமையாக நடந்து போய் கொண்டிருப்பதைக் கண்டார். திடீரென்று காற்றுப் பலமாக வீசியதால் அந்த இளைஞனின் மேலாடை மேலெழுந்து கீழே அவன் அணிந்திருந்த சிவப்பு வண்ண பட்டுக் கால்சட்டை அதிகாரியின் கண்ணில் பட்டுவிட்டது. விலை உயர்ந்த பட்டினைக் கால்சட்டையாக அணிந்து



ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவிட்டதால் அதிகாரி அவனுக்குப் பத்துச் சவுக்கடித் தண்டனை வழங்கினார். ஐந்து அடிகள் விழுந்ததுமே அந்த இளைஞன் தான் தன் இடுப்பிற்கு மேலே உள்ளாடையாக அணிந்திருப்பது எளிய மட்டமான துணியாதலால் ஐந்து அடிகள் போதுமானது என்று சொல்லி மேற்கொண்டு அடிப்பதை அவ் இளைஞன் எதிர்த்தான்.


## 32. சாப்பாட்டு ஆசை

'பசிக்கிறது' என்று அழுதுகொண்டே தன் தந்தையிடம் முறையிட்டது ஒரு குழந்தை. மகனின் முதுகை வருடியவாறு தந்தை "மகனே, உண்பதற்கு உனக்கு என்ன வேண்டும். கடல் அரசன் வருணனின் ஈரல் வேண்டுமாயினும் நீள்விலங்கும் பறவையின் விலாக்கறி வேண்டுமாயினும், எது வேண்டுமாயினும் சொல்; அதை உனக்கு நான் தருவேன்" என்றான். "எனக்கு எளிய சாப்பாடு போதும்" என்று கேட்டான் மகன். "மடையனே" கத்தினான் தந்தை "எப்போதும் நீ, எது நம்மிடம் இல்லையோ அதைத்தான் கேட்கிறாய்" என்று சினந்து கொண்டான் தந்தை.

## 33. கடினமானது எது

உலகத்தில் கடினமான பொருள் எது என்பது பற்றி இரண்டு மனிதர்கள் தருக்கித்துக் கொண்டிருந்தனர். இரும்புதான் கடினமானது என்றான் ஒருவன். "இல்லை, இரும்பு நெருப்பில் உருகிவிடும். எனவே அது கடினமானது அன்று" என்று மறுத்தான் மற்றவன். "அப்படியானால் கடினமானது

தான் எது?'' என்றான் முதலாமானவன். ''மனிதனின் தாடிதான்'' என்றான் இரண்டாவது பேர்வழி. அவன் தொடர்ந்தான் ''ஏனெனில் எவ்வளவு தான் முகத்தின் தோல் கடினமாக இருந்தாலும் அதில் தாடி முளைத்து விடுகிறதே'' என்றான்.




*குறிப்பு :* சீன நாட்டில் தன்மான உணர்வற்றவனை முகம் தடித்தவன் என்று அழைப்பதுண்டு. நம் நாட்டில் கூட சூடுசொரணையற்றவனை தடித்த தோலன் என்பர்.

# 34. வெறும் காக்காப் பொன்

வைக்கோற் துரும்பினைக் காக்காப் பொன்னென்று விற்றுப் பணம் சேர்த்தான் முட்டாள் ஒரு காகிதப்பொன் வணிகன். அவனுடைய முட்டாள் மகனோ அவனுடைய இந்தத் தொழில் கமுக்கத்தைச் சிலரிடம் சொல்லி வந்தான். இதையறிந்த தந்தை மகனிடம் "யாராவது, எப்பொழுதாவது இதுபற்றிக் கேட்டால் இது காக்காப்பொன் என்று மட்டும் சொல்; வேறு எதுவும் சொல்லாதே" என்று அறிவுரை வழங்கினான்.

ஒரு நாள் அதிகாலையில் தந்தை எழுந்து அவருடைய நண்பர் ஒருவருடன் வெளியில் சென்றார். வைக்கோற் துரும்பொன்று தந்தையின் தாடியில் ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்ட மகன் "அப்பா, அப்பா உமது தாடியில் ஒரு காக்காப் பொன்" என்று வியப்பில் கூவினான்.



## 35. பொய்யரசர்

திருமணம் ஒன்றினால் இரண்டு குடும்பங்கள் இணைக்கப்பட்டன. மணமகனின் தந்தை பெரும் செல்வர். அவர்(தன் சம்பந்தி) மணமகளின் தந்தையை வீட்டிற் கழைத்துத், தன் வீட்டிலுள்ள விலையுயர்ந்தப் பொருள்களை யெல்லாம் காட்டிப் பெருமை பாராட்டிக் கொண்டார். பின்னர் "இதைப் போன்ற விலைமதிக்க முடியாத பொருள்கள் ஏதேனும் உங்களிடம் உண்டா?" என்று கேட்டார். "உங்களிடத்தில் உயிரற்றப் பொருள்கள் தான் இருக்கின்றன. இங்கு நான் வியப்படையும்படியாக ஒன்று மில்லை. எங்கள் வீட்டில் விலைமேறப் பெற்றதும் உயிருள்ளதுமான இரண்டு அற்புதமான கருவூலங்கள்



வைத்திருக்கிறோம்'' என்றார் மணமகளின் தந்தை. "அவை யாவை?'' என்று வினவினார் மணமகளின் தந்தை.

"ஒரு தெய்வீக கொக்கும், மிக வியக்கத்தக்க கடற் குதிரையும்'' என்று மறுமொழிப் பகர்ந்தார் மணப் பெண்ணின் தந்தை. "எனக்கு அவற்றை ஒரு முறை காட்டுங்கள்'' என வேண்டினார் பிள்ளையின் தந்தை. பெண்ணின் தந்தை நாள் ஒன்றைக் குறித்துப் பின் விடை பெற்றுச் சென்றார்.

வீட்டையடைந்து பெண்ணின் தந்தை மிகவும் சோர்ந்து காணப்பட்டார். வாடியத் தந்தையிடம் மகன் விளக்கம் கேட்டார். தந்தை சொன்னார் "நேற்று நான் நம் பெண்ணின் வீட்டாரிடம் ஒரு பொய் சொல்லிவிட்டேன்.



நம்மை அவர்கள் உயர்வாக எண்ண வேண்டும் என்ற நோக்கத்தில். நம்மிடம் தெய்வீகக் கொக்கு ஒன்றும், கடற் குதிரையொன்றும் இருப்பதாகச் சொல்லிவிட்டேன். அவர் களும் அவற்றைக் காண வரவிருக்கிறார்கள். என்ன செய்வதென்றே தோன்றவில்லை'' என்று. ''கவலையை விடுங்கள் நான் சமாளித்துக் கொள்கிறேன்'' என்றான் மகன்.

குறிப்பிட்ட நாளும் வந்தது. பிள்ளையின் தந்தையும் வந்தார். பெண்ணின் தந்தையை அரசர் உடையை அணியச் செய்து, தலையில் மணி மகுடத்துடனும், கையில் வாளு டனும், கூடத்தின் நடுவில் ஒரு மேடையமைத்து அதில் அமரச் செய்தான் அவரின் மகன். ''உங்கள் புகழ்மிக்க தந்தை யெங்கே?'' என்றார் ஆவலுடன் பணக்கார மாமனார். ''அப்பா அவசர அலுவல் காரணமாக எதிர்பாரத நிலையில் வெளியே சென்றுள்ளார் என்றான் மருமகன். ''உங்கள் தந்தை தெய்வீகக் கொக்கினையும், கடற்குதிரையையும் எனக்குக் காட்டுவதாகச் சொல்லி என்னை அழைத்தார். அவற்றைப் பார்த்துவிட்டுச் செல்லத்தான் வந்தேன்'' என்றார் அவர். மரு மகன் சொன்னான் ''அடடா, போகூழ் நிலையில் இரண்டுமே இப்போது இங்கு இல்லையே. எங்கள் கடற்குதிரையை இப்போது தான் கடல் அரசன் பவனி வர இரவல் வாங்கிச் சென்றான். விண்ணகத்தில் நடக்கும் விருந்தொன்றில் கலந்து கொள்ள கொக்கினை இரவலாக அழைத்துச் சென்றுள்ளது தேவதை'' என்று. இதனைக் கேட்டு வியப்பு இன்னும் அதிகமாகக் கூடத்தின் இடையில் அரச பாவ னையில் வீற்றிருக்கும் பெண்ணின் தந்தையைச் சுட்டிக் காட்டி ''இதன் தெய்வீகத் தன்மையென்ன?'' என்றார் பிள்ளையின் தந்தை. மருமகன் ''அதுவா, இவர் எங்கள் உற வினர் வணக்கத்திற்குரிய பொய்யரசர்'' என்றான். வந்தவர் திகைத்து நின்றார்.

## 36. மனிதனின் வலிமையின்மை

தனக்குப் பொருத்தமில்லாத கணவனுக்கு தக்கப் பயிற்சியளித்து தாய்வீடு அழைத்து வந்தாள் பெண்ணொருத்தி. "என் பெற்றோர்களிடம் இரண்டு சிறந்த ஓவியங்கள் உள்ளன. அவை எங்கள் குடும்பத்தின் பழங்காலச் சொத்து. அந்த ஓவியங்கள் ஒன்றில் காட்டோடை ஒன்றின் அருகில் 'சேரர்' காலத்துக் குதிரை ஒன்று நின்று கொண்டிருப்பதைப் போலவும், மற்றொன்றில் அழகுணி மரங்கள் நிறைந்த வனாந்தரத்தில் 'சோழர் காலத்து' ஒன்று நின்று கொண்டிருப்



பது போலவும் ஓவியம் தீட்டப்பட்டுள்ளன. அவற்றை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்'' என்று அவள் தன் கணவனுக்குக் கற்பித்தாள். வீட்டை அடைந்ததும் மாமனார் மருமகனிடம் அவ் இரு ஓவியங்களையும் காட்டி, அவை என்ன? என்று கேட்டான். மனைவி ஏற்கனவே கற்பித்த வண்ணம் விடை சொன்னான். மருமகனின் விடையைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார் மாமனார். சற்று நேரத் துக்குப் பின் பதினெட்டு அறிஞர்களின் உருவங்கள் தீட்டப் பட்ட ஓவியத் திரையொன்றைக் காட்டி மருமகனிடம் அவ்வோவியம் பற்றிக் கேட்டார். மருமகனோ தன் மனைவி ஏற்கனவே கற்றுக் கொடுத்த முன்பு சொன்ன பதிலை யையே கிளிப்பிள்ளைபோல் சொன்னான்.


இதனைக் கேட்டு அங்குக் குழுமியிருந்தோர் நகைத் தனர். மாமனாரோ மருகமனிடம் "உனக்கு மாட்டினையும், குதிரையினையும் தெரிகிறது. ஆனால் மனிதர்களைத்தான் அடையாளம் காணத் தெரியவில்லை" என்றார்.

## 37. காலமுள்ளபோதே நற்பணி

வாள் கொண்டு இரு கூறாய் உடலை வெட்டி நெருப்பில் வீசப்படும் கொடிய நரகத் தண்டனையிலிருந்து ஒருவன் விடுபட, புத்தரைத் தெய்வமாகத் தொழுது, பௌத்த மடங்களுக்கு நன்கொடைகள் அளித்து, பௌத்த துறவிகளுக்குத் தருமம் தந்து அவர்களைப் போற்றி வருதல் வேண்டும் என்று போதித்து வந்தார் பௌத்த துறவி ஒருவர்.

விரைவிலேயே அந்த பௌத்த துறவியும்; அவரையும் அவருடைய போதனைகளையும் போற்றிக் காப்பாற்றி வந்த அவருடைய தலையாயத் தொண்டனும் மடிந்தனர். உலகில்

தான் செய்த பாவங்களுக்காக உடலை இரு கூறாக்க நரகத்தின் பலிபீடத்துக்குக் கொண்டு வரப்பட்டார் துறவி. இதனைக் கண்டு அவரது தொண்டன் ஓடிச்சென்று துறவியிடம் விளக்கம் கேட்டார். விளக்கம் தந்தார் துறவி. "உனக்குப் புரியாது மண்ணுலகில் பௌத்த மடங்களும், துறவிகளும் நாளுக்கு நாள் குறைந்து வருவதை உணர்ந்த, நரக உலகின் அதிபதி, இறந்துபோன ஒவ்வொரு துறவியையும்



இரண்டாக வெட்டி, துறவிகளின் எண்ணிக்கையை இரு மடங்காக்க ஆசை கொண்டு என்னை இவ்வாறு இரண்டாகப் பிளக்கப் போகிறார் என்றார். துறவி விளக்கம் கேட்டும், அவர் வெட்டப்படுவது கண்டும் விழி பிதுங்க வியப்புடன் நின்றார் தொண்டர்.

## 38. மனைவிக்குப் பயந்த மாவட்ட நீதிபதி

மனைவிக்கு அஞ்சிய மாவட்ட நீதிபதி ஒருவர் இருந்தார். ஒருநாள் தனது வீட்டின் மதிற்சுவருக்கு வெளியே யாரோ சிலர் சண்டையிட்டும் இறைச்சல் கேட்டது. உடனே தன் ஏவலனைக் காரணம் கண்டுவர அனுப்பினார் நீதிபதி. ஏவலன் திரும்பி வந்து, "நமது காவலர் அறையின் முன் ஒரு கணவனும் மனைவியும் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். மனைவி கணவனை அடித்துக் கொண்டிருக்கிறாள்"



என்றான் நீதிபதி. அதுகேட்டு பற்களை 'நறநற'வென்று சினத்தில் கடித்தார். நான் மட்டும் அவனிடத்தில் இருந்தால், நான் என்ன செய்வேன் தெரியுமா?...என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவருடைய மனைவியின் தலை

தெரிந்தது. மனைவியின் தலை தெரிந்ததும் அச்சத்தில் நீதி பதி "உடனே நான் முழங்காற் படியிட்டுக் கொடுக்கின்ற அடி உதைகளை ஆடவன் போல் அடக்கத்தோடு பெற்றுக் கொள்வேன்" என்றார்.

## 39. விலைமதிக்க முடியாத சரக்கு


தந்தையும் மகனும் மது நிறைந்த ஒரு பானையைத் தூக்கிக் கொண்டு வந்தனர். வழியில் அடி பிறண்டதால் (கால் தடுமாறியதால்) பானை கீழே விழுந்து நொறுங்கி, மது வெல்லாம் சிந்தியது. உடனே மகன் தரையில் மண்டியிட்டு சிந்திய மதுவை எவ்வளவு விரைவாகக் குடிக்க முடியுமோ



அவ்வளவு விரைவாகக் குடித்தான். சற்று நேரத்திற்குப் பின் தலைதூக்கித் தந்தையைப் பார்த்து "நீங்கள் ஏன் காத்துக் கொண்டிருக்கிறீர்கள். யாராவது வந்து இந்திய மதுவை கிண்ணங்களில் வழித்தெடுத்துச் சென்றுவிடுவர்" என்றான்.

## 40. அடையாளம் காணமுடியாது

அண்ணாமலையான் உண்பதில் ஆர்வமிக்கவன். அவன் ஒவ்வொரு விருந்தின் போதும் இடைவெளியின்றி



தொடர்ந்து உண்பது பழக்கம். ஒருநாள் ஒரு விருந்தின் போது எதிரேயிருந்த விருந்தினர்களில் ஒருவரை நோக்கி, "இப்படிப்பட்ட விருந்துவொன்றில் முன்னமே உங்களை நான் பார்த்தது போல் தோன்றுகிறதோ" என்றான். "இல்லை;

இல்லை நீங்கள் வேறு யாரையோ பார்த்துவிட்டு நான் என்று தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்'' என்றான் அந்த மற்ற விருந்தினன்.

அடுத்து வேறு வகை உணவுகள் பரிமாறப்பட்ட போது, மீண்டும் அந்த அண்ணாமலை உணவுண்ண பயன் படுத்தப்படும் கரண்டிகளை இங்குமங்கும் விரைவாக அசைத்து உண்ணத் தொடங்கினான். கவிழ்ந்த தலை நிமி ராமல் அவன் தொடர்ந்து உண்பதைக் கண்ட மற்றொரு



விருந்தினன் ஆமாம், நாம் முன்பே ஒரு முறை சந்தித்திருக் கிறோம். உண்மையென்னவெனில் அந்த விருந்தின்போது நீங்கள் எதிரில் இருப்பவர்களை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல் உணவு வகைகளில் வைத்த கண் வாங்காமல் குனிந்த வண்ணம் சாப்பிட்டதால், உங்கள் திருமுகத்தை என்னால் காணமுடியாமல் போய்விட்டது. மன்னிக்க வேண்டும்'' என்று மறுமொழி பகர்ந்தான் அந்த மற்றுமொரு விருந் தினன்.

## 41. மறைவாக உண்ணும் விருந்தளிப்பவன்

விருந்தினர்கள் முற்றத்தில் அமர்ந்திருக்கும் போது வீட்டுக்காரன் உள்ளே சென்று முதன் முதலில் விருந்து ணவை மறைவாகச் சுவைப்பதும் வழக்கம். ஒருமுறை விருந் தினர்களில் ஒருவன் வீட்டுக்காரன் உள்ளே சென்று மறைவாக விருந்துணவை உண்பதைக் கவனித்துவிட்டு, எல்லோரும் அறியும் வண்ணம் "இந்த விருந்துண்ணும் கூடம் மகத்தானது, ஆனால் எல்லாத் தூண்களும் குறுக்குச் சட்டங்களும் கட்டைகளும் கரையானால் தின்னப்படுகின் றன!'' என்று உரக்கக் கூவினான். "என்ன? என்ன'' உணவை மறைவாக உள்ளே உண்டு கொண்டிருந்த வீட்டுக்காரன் வெளியே, ஓடிவந்தான். வந்தவன் 'எங்கே கரையான்?' என்றான். "நல்லது அவற்றை நீங்கள் காணமுடியாது'' என்றான் விருந்தினன். அவன் மேலும் "உண்பதெல்லாம் இங்கே உள்ளேதான் நடைபெறுகின்றன'' எனத் தொடர்ந்தான் அந்த மனிதனின் மனத்தில் தைக்கும்படி விருந்தினன்.

## 42. திருடனிடமிருந்து தப்பிக்க

அறியாமைமிக்க மனிதன் ஒருவன் தன் வீட்டினுள் திருடன் ஒருவன் நுழைவதைக் கண்டான். விரைந்து சென்று "அனுமதி இல்லை" என்னும் வாசகம் எழுதிய பலகையை அறையின் முகப்பில் ஒட்டினான். ஆனால், பின்புறமுள்ள அறைக் கதவை உடைத்து உள்ளே நுழைய முற்படுவதைக் கண்டதும் "வெளியே செல்ல அனுமதி இல்லை" என்ற வாசகத்தை ஒட்டினான். பின்னர் உட்புற முள்ள அறையினுள் சென்று நடப்பதை மறைந்திருந்து கவ னித்தான். அந்த அறிவிப்பு வாசகங்களை மீறித் திருடன் உள்ளே நுழைந்ததைக் கண்டதும், பயந்து கழிப்பறையினுள் சென்று மறைந்து கொண்டான். திருடனோ எதிர்பாராத வகையில் கழிவறை நோக்கிச் சொன்று கொண்டிருந்தான். இதனைக் கண்டு மேலும் கலக்கமுற்ற அந்த மனிதன் கழி வறைக் கதவினைக் கையினால் பலமாக அழுத்தி பிடித்துக் கொண்டு "கழிவறை உள்ளே ஏற்கனவே ஆள் இருக்கிறது" என்று கத்தினான்.

## 43. தவிர்க்க முடியாத எட்டாவது

மது அருந்த ஆசைகொண்டாள் ஒரு இல்லத்தரசி. ஆனால் அவள் கணவனோ அவள் ஆசையை நிறைவேற்ற மறுத்தான். அவன் சொன்னான் "குடும்பம் நடத்த ஏழு பொருள்கள்தான் இன்றியமையாதவை, அவை: விறகு, அரிசி, சமையல் எண்ணெய், உப்பு, பருப்பு, புளி, தேயிலை என்று தான் சொல்லப்படுகிறது. மது அந்தக் குறிப்பில் காணப்படவில்லையே" என்று தன் மறுப்புக்கு விளக்கம் தந்தான் கணவன்.

சினமுற்ற மனைவி "குடும்பம் நடத்தத் தொடங்கும் முன்பே, மதுவை முந்திய இரவே கொண்டுவரப்பட வேண்டும், அப்படியானால் மதுவை எட்டாவது தவிர்க்க முடியாத பொருளாக இணைத்துக் கொண்டால் என்ன? என்று எரிந்து விழுந்தாள் கணவனிடம்.

## 44. தீயினால் சுட்டப் புண்

மதிமிஞ்சிக் குடித்தபின், மயங்கி விழுந்து தூங்கினான் கிழவன் ஒருவன். குளிர் காலமாதலால் குளிர்காய அடுப் பொன்றைத் தன் படுக்கையின் கீழே வைத்திருந்தான். போதையில் தன் கால்கள் இரண்டினையும் அனலுக்கருகில் வைத்தவாறு தூங்கினான். அன்றிரவு அனல்பட்டுக் கால்



ஒன்று கருகியது. காலையில் கருகிய காலைத் தன் குடும்பத் தவரிடம் காட்டி "நான் தான் போதையில் தூங்கினேன்; எனவே கால் கருகுவதைக் என்னால் உணர முடிய வில்லை. ஆனால் உங்களுக்கெல்லாம் என்ன நடந்தது. இளைஞர்களா கிய நீங்கள் ஏன் என்னைக் காப்பாற்றவில்லை. கால் கருகி வீசுவதை நீங்களும் உணரவில்லையா? என்று கேட்டார் முதியவர்.

## 45. தீய எண்ணங்கள்

படகொன்றில் பயணம் செய்தார் துறவி ஒருவர். அருகில் உடன் அமர்ந்து பயணம் செய்த பாவையை இச்சை



யோடு பார்த்தார் துறவி. தன்னைக் காமவெறியோடு வைத்த கண் வாங்காமல் காண்பதைக் கண்ட அப் பாவை சினம் அடைந்தாள். தவற்றைத் தொடர்ந்தால் அடிப்பேன் என்று அச்சுறுத்தினாள்.

அஞ்சிய அடியார் அடக்கத்தோடு கண்களை மூடிய வண்ணம் அமர்ந்திருந்தார். படகு கரைசேர்ந்ததும் அப் பாவை அடியாரை அடித்தாள். தண்டனையின் காரணம் அறியாது திருதிருவென்று விழித்தத் துறவி "இப்போது நான் தவறேதும் செய்யவில்லையே; பின் ஏன் என்னை அடிக்கிறீர்கள்?" என்று வினவினார். "மூடிய விழிகளுக்குள்ளே நீங்கள் என்னைக் கண்டீர்கள் அது திறந்த கண்களால் காண்பதினும் கொடிய பாவம்" என்றாள் அப்பாவை.

## 46. நலமான இறப்பு

மருத்துவம் பயின்ற மாணவன் ஒருவன் மருத்துகள் ஒவ்வொன்றைப் பற்றியும் அதன் இதர விளைவுகள் பற்றியும் கற்பதில் அதிக அக்கறை செலுத்துவதில்லை. நோயாளியின் நாடித் துடிப்பினைக் கணித்தவுடனேயே மருந்தினைக் குறித்துக் கொடுத்து அருந்தும்படித் தன் நோயாளிகளிடம் சொல்லிவந்தான். அதன் விளைவாக பற்பல நோயாளிகள் ஒருவர்பின் ஒருவராக இறந்தனர். இறந்தவர்களில் ஒருவரின் உறவினர் சாக்காட்டிற்கு மருத்துவரே பொறுப்பு என்று குற்றம் சாட்டினார். அப்போது மருத்துவர் "நோயில் வாடி மடிவதைக் காட்டிலும், நலமாய் சாவதே சிறந்தது என்று எண்ணி, அவர்கள்மீது கொண்ட இரக்கத்தால் அவர்களை நலமாய் இறக்கச் செய்தேன்" என்றார்.

# 47. இருக்க ஓர் இருக்கை வேண்டும்

இரண்டு உடன்பிறந்தவர்கள். மூத்தவர் செல்வர். இளையவர் எளியவர். "நீ எப்படி செல்வன் ஆனாய்" இளையவன் கேட்டான். "பன்றிகளையும் ஆடுகளையும் கடவுளுக்குப் படைத்தேன். பணக்காரன் ஆனேன்" என்றான் மூத்தவன்.

இளையவன் மனைவியிடம் வந்து, பணக்காரனாகும் முறையினைச் சொன்னான். அவளும் "அதனாலென்ன நம்மிடமும் நான்கு கால்கள் உள்ள நாற்காலிகள் இரண்டுள்ளன. பன்றிக்கும் ஆட்டிற்கும் பதிலாக இவ் இரண்டையும் இறைவனுக்குப் படைக்கலாம். இவற்றுக்கும் எட்டுக்



கால்கள் உள்ளன'' என்று சொல்லிப் பலிப் பொருளைக் காட்டினாள்.

மனைவி சொல்லே மந்திரம் என நினைத்த கணவனும் அவ்வாறே செய்தான். ஆனால் தெய்வமோ பலியைக் கண்டு கோபம் கொண்டது. சில நாள்களுக்குப் பின் மனைவி கணவனிடம் "உண்பதற்குக் கொடுக்க ஒன்றும் இல்லையென்றாலும், வந்த விருந்தினர்கள் அமர இரண்டு இருக்கைகளாவது இருந்தன. இப்போது அவையும் இல்லை'' என்று சலித்துக் கொண்டாள்.

## 48. நலிந்த நல்வரவு

தங்கள் மதுக் கலயங்கள் காலியான பின்னும் நீண்ட நேரம் மதுக்கடையிலேயே அமர்ந்திருந்த வாடிக்கையாளர்கள் இருவரை நோக்கிக் கடைக்காரர் "கொண்டல் கருத்துவிட்டது; கனமழை வரப்போகிறது; வீட்டிற்கு விரைந்து செல்லுங்கள்'' என்றார். அவ் இருவரில் ஒருவன் சொன்னான்'' இதோ பார், மழை வருகிறது நாம் எங்கும் போகவேண்டாம்; மழை பெய்து முடியும் வரை நாம் இங்கேயே இருப்போம்!'' என்று. மழை வருவதாகவும் இல்லை. அவர்கள் அங்கிருந்து நகருவதாகவும் தெரியவில்லை. வெறுப்புற்றக் கடைக்காரர் மீண்டும் அவர்கள் அருகில் வந்து "முகில் கலைந்து விட்டது. இனி மழை வராது. நீங்கள் செல்லலாம்'' என்றார். இதனைக் கேட்டதும் அவ் இருவரில் ஒருவன் மற்றவனிடம், "இப்போதே போக வேண்டும் என்று ஏன் கவலைப்படுகிறாய்? கவலைப் படும்படி புயல் ஒன்றும் வீசவில்லை. அமைதியாக இரு'' என்றான். கடைக்காரர் செய்வதறியாது விழித்தார்.

## 49. ஒரு கோடிக்கதிபதியின் கவலைகள்

கோடிக்கதிபதி ஒருவன் தன் நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடினான். ஏராளமான நண்பர்களும், உறவினர்களும் வாழ்த்துத் தெரிவிக்க அவன் இல்லம் வந்திருந்தனர். அளவற்ற அன்பளிப்புகள் வந்து குவிந்தன. எங்கும் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. எனினும் அந்த அதிபதியின் முகத்தில் வாட்டம் தோன்றியது. 'ஏன்?' என்று கவலைப்பட கேட்டார் வந்திருந்தவர்களில் ஒருவர். "கவலைப்பட ஒன்றுமில்லை. ஒருவேளை நான் என் இரு நூறாவது பிறந்த



நாளை கொண்டாடும் போது வாழ்த்துத் தெரிவிக்க வந்தவர்களின் எண்ணும் பல நூறு மடங்கு இதனினும் அதிகமாக இருக்குமே. அவர்களையெல்லாம் நான் எப்படி வரவேற்றுச் சமாளிப்பேன் என்பது பற்றித்தான் கவலை கொள்கிறேன்'' என்றான் அந்த கோடிக்கதிபதி.

## 50. அக்கறையற்ற தையல்காரன்

ஆடை ஒன்றிற்கு துணியினைக் கத்தரிக்க, தையல்காரன் அழைக்கப்பட்டான். வந்தவன் வேலையில் கவனம் செலுத்தாது, அக்கறையற்றுக் காணப்பட்டான். வாடிக்கையாளர் கேட்டபோது, "உங்களுக்குப் பொருந்தும் வண்ணம் துணியைக் கத்தரித்தால் எனக்கு எதுவும் மிஞ்சாது; ஒரு முழம் துணியை நான் எடுத்துக் கொண்டால், ஆடை அளவு உங்களுக்கு மிகவும் சிறியதாக இருக்கும். இந்தச் சிக்கலைத் தீர்ப்பது எப்படி என்றுதான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான் தையற்காரன்.

## 51. மதுவிலக்கு

தனியார் விருந்தொன்றில் கலந்துகொண்டார் துறவி ஒருவர். துறவி புனிதமானவர் என எண்ணிய விருந்தளிப்பவன் "தங்களுக்கு மது பரிமாறப்பட வேண்டுமா?'' என்று துறவியிடம் கேட்டான். "நான் கொஞ்சம் குடிப்பவன்தான். ஆனால் சைவ உணவை முற்றிலும் ஒதுக்குபவன்'' என்றார் துறவி.

## 52. மகன் தந்தைக்காற்றும் கடன்

நோயாளி ஒருவருக்கு மருத்துவம் செய்ய மருத்துவர் ஒருவர் அழைக்கப்பட்டார். ஆய்வுக்குப் பின், நிலமை மிகவும் இழிநிலையில் இருப்பதைக் கண்டார் மருத்துவர். நோயாளியின் மகனின் தொடையிலிருந்து ஒரு துண்டு தசையினை வெட்டியெடுத்து நோயாளிக்கு உண்பதற்குக் கொடுத்தால்தான் குணமாகும் என்றார் மருத்துவர்.

நோயாளியின் மகன் இதோ தசையினை விரைவில் கொண்டு வருகிறேன் என்றான்.



மருத்துவர் சென்றபின், கத்தியை எடுத்துக் கொண்டு நோயாளியின் மகன் வெளியில் சென்றான். கோடைக்கால மானதால் வாசலின் வெளியே ஒரு மனிதன் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அந்த மனிதனின் தொடையி லிருந்து ஒரு துண்டு தசையினை வெட்டியெடுத்தான்.


பயந்து எழுந்த அந்த மனிதன் வேதனையில் கத றினான். கதறிய அந்த மனிதனைப் பார்த்து, அழாதே என்று தன் கைகளை அசைத்துச் செய்கை செய்து காண்பித்தான். பின்னர் அவன் சொன்னான், "உனது தசை சாகப்போகிற ஒரு தந்தையின் உயிரைக் காக்கப்போகிறது. ஒரு தந்தைக்கு மகன் செய்ய வேண்டிய கடமையின் இன்றியமையாமையை நீ அறிய மாட்டாயா?" என்று.

## 53. வேதனையிலிருந்து விடுபெற வழி

சீழ்க் கட்டி வளர்ந்து கால் ஒன்று புற்றுக்கழலை நோயால் பாதிக்கப்பட்டு மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார் ஒருவர். ஒரு நாள் அவர் தன் வீட்டுச் சுவரில் துளை ஒன்றினை ஏற்படுத்தி அதன் வழியாகப் பாதிக்கப்பட்ட காலை வீட்டை விட்டு வெளியே தெருவில் நீட்டிக் கொண்டிருந்தார். "ஏன்?" இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்ட போது தன் புருவத்தை உயர்த்தி அவர் சொன் னார், "என்னால் இந்த நோயின் படும் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இந்த நோய் என்னை விட்டு விலகிப் போகவே இவ்வாறு காலை வெளியே நீட்டிக் கொண்டிருக்கிறேன்" என்று.

# 54. தவறான செயல்களால் ஏற்பட்ட விளைவு

போலி மருத்துவர் ஒருவருக்கு இரண்டு பிள்ளைகள். ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தனர். ஆனால் தன் மருத்துவத்தினால் மரித்துப்போன ஒரு குழந்தைக்கு ஈடாகத் தன் மகனை அவர் கொடுக்க வேண்டியது நேரிட்டது. தன் கவனக் குறைவினால் இறந்து போன மற்றொரு குழந்தைக்காகவும் தன் மகளையும் ஈடாகக் கொடுக்க வேண்டியது நேர்ந்தது. இதனால் வேதனையுற்ற அந்த மருத்துவர் தம் மனைவியுடன் பிள்ளைகள் இருவரையும் பிரிந்து மனக் கவலையுடன் வாழ்ந்து வந்தார்.



ஒருநாள் மருத்துவ ஆய்வினைப் பெறுவதற்காக ஒரு மனிதன் அவர் வீட்டுக் கதவினைத் தட்டினான். 'நோயாளி யார்?' என்று மருத்துவர் கேட்டார். 'என் மனைவி' என்றார் வந்தவன்.


இதனைக் கேட்ட மருத்துவர் விழிகளில் நீர் ததும்ப "ஆ! என்ன வேதனையிது. உன் மீது யாரோ ஒருவர் மையல் கொண்டுவிட்டார்" என்று மருத்துவர் தம் மனைவியைப் பார்த்துப் பதறிச் சொன்னார்.

## 55. பழக்கத்தின் விளைவு

எவ்வளவு குறைவான அளவு குடித்தாலும், மிதமிஞ்சிய குடியில் இருப்பது போல் பாவனை செய்து கீழ்த் தரமான செயல்களைச் செய்து வந்தான் குடிகாரன் ஒருவன். ஒருநாள் அவன் தன் மனைவியிடம் மது கேட்டான். அவன் செயலைக் கண்டு ஏற்கனவே வெறுப்புற்றிருந்த அவன் மனைவி சாராயத்துக்குப் பதிலாக சாயத் தண்ணீரை ஊற்றிக் கொடுத்தாள். அவனும் அதைக் குடித்து முடித்தான். சற்று நேரத்துக்குப் பின் போதை தலைகேறியவன் போல் நடிக்கத் தொடங்கினான். வியப்புற்ற மனைவி வேதனையிலும் வெறுப்பிலும் அவனை நன்றாகத் திட்டித் தீர்த்தாள். பின்னர் அவனிடம் "நான் உனக்குத் தந்தது சாயத் தண்ணீர் தான்; சாரயம் அன்று. பின் எப்படி உனக்குப் போதை ஏறும்; தாறு மாறாய் நடக்க முடியும்?" என்று கேட்டாள். அவனோ பொறுமையாக "நான் அப்போதே நினைத்தேன் ஏதோ தவறு நடந்திருக்கிறது என்று ஆகவே தான் இன்னும் எனக்குப் போதை குறையவில்லை" என்றான்.

# 56. அதை அகற்ற ஆய்வுரை

செல்வன் ஒருவனுக்கு மலச்சிக்கல் ஏற்பட்டது. கடினமான முயற்சிக்கும் (உழைப்பிற்கு) பின் அது வெளி யேற்றப்பட்டது. அவர்படும் வேதனையைக் கவனித்து வந்த ஒருவர் சொன்னார், "அன்றாடம் அவற்றை அகற்ற நீங்கள் அல்லல் படுகின்றீர்கள் ஏன்? உங்களிடம்தான் செல்வம் இருக்கிறதே ஒரு வேலைக்காரனை நியமித்து அந்த வேலையைச் செய்யச் சொல்லக்கூடாதா?" என்று ஆய்வுரை வழங்கினார்.



## 57. கழுத்துக்குமேல் துண்டிக்க வேண்டுதல்

கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி ஒருவன் தண்டனையை நிறைவேற்ற வந்த கொலையாளியிடம் "நான் சாகப்போகிறேன். அதை நீங்கள் செய்யுங்கள்; ஆனால் உங்கள் கொலை வாள் என் கழுத்தில் மேல் பகுதியில் விழும்படி துண்டியுங்கள்" என்று வேண்டிக் கொண்டான். 'ஏன்?' என்று கேட்டபோது அவன்



சொன்னான், "என் கழுத்தின் கீழ்பகுதியில் கொப்பளம் (புண்) ஒன்று உள்ளது. அதன் மீது வாள்முனைப் பட்டால் வேதனை அதிகமாகும் அல்லவா" என்று.

# 58. தலைநகரத்தில் மட்டுமே வட்ட நிலவு

தலைநகரைச் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பிய இளைஞன் ஒருவன் தன் தந்தையிடம் எப்போதும் தலை நகரின் பெருமைகளைச் சொல்லிக் கொண்டே வந்தான். ஒருநாள் மாலையில் தந்தையும் மகனும் நிலவொளியில் பொறுமையாய் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அப்போது அவ் வழியாய் சென்ற வழிப்போக்கன் "ஆ! என்ன அழகான நிலவு இது!" என்று விண்ணை நோக்கிய வண்ணம் நிலவை வியந்து சொன்னான். இதனைக் கேட்ட மகன் சொன்னான் "இது என்ன அழகு; தலைநகரத்தில் உள்ள நிலவு இதனினும் அழகிற் சிறந்தது" என்று.



தலைநகர் பெருமையைக் கேட்டுக் கேட்டுக் கிறு கிறுத்தத் தந்தை "முட்டாளே, வானில் உலவிவரும் நிலவு எங்கும் ஒன்றுதான். அது எப்படி தலைநகரத்து நிலவு இதனினும் அழகிற் சிறந்ததாயிருக்க முடியும்? என்று கேட்டு ஓங்கி அவன் கன்னத்தில் அறைந்தார். அறைபட்டு அதிர்ந்த மகன் தேம்பித் தேம்பி அழுதவண்ணம் தன் தந்தையிடம் "தலைநகரில் நீங்கள் கொடுத்த அடி இதனினும் மிகக் கடினமாக இருந்ததே" என்றான்.

## 59. மகனின் பெருமை

தந்தையும் மகனும் ஒருநாள் நகரத்து வீதி வழியே உலா வந்தனர். பாதையில் சென்ற ஒருவர் தந்தையை



அணுகி "சிறுவன் யார்?" என்று கேட்டார். தந்தை சொன்னார் "அரசுக்கு மிகவும் வேண்டப்பட்ட உள்துறை அமைச்சர் ஒருவரின் குடும்பத்தின் நேரிடை வழி வந்த ஒன்பதாவது தலைமுறைப் பேரனின் மருமகனாக வாய்த்த இவன் என் மகன் ஆவான்" என்றார்.

## 60. பட்ட கடன் அத்தனையும் மறுபிறவியில்

செல்வர் ஒருவரிடம் மிகப்பலர் கடன்பட்டிருந்தனர். தம்மிடம் கடன்பட்ட அனைவரையும் அழைத்து, மறுபிறவியில் தற்போது வாங்கிய கடனை தருவதாக வாக்களித்தால் இப் பிறவியில் அனைவரின் கடனையும் தள்ளுபடி



செய்வதாகச் சொன்னார் அந்தச் செல்வர். இதனைக் கேட்டு அவரிடம் கடன் பெற்றோர் அனைவரும் அகமகிழ்ந்தனர்.

முதலாம் ஆள் "அடுத்தப் பிறவியில் நான் குதிரை யாகத் தோன்றி, உங்களைச் சுமந்து சென்று, நான்பட்ட கடனைத் தீர்க்கிறேன்" என்று வாக்களித்தான். உடனே செல்வர் அவன் கடன் ஆவணத்தை எதிரில் நெருப்பி லிட்டுச் சாம்பலாக்கினார்.

இரண்டாம் ஆள் சொன்னான் "இப் பிறவியில் நான் உங்களுக்குப்பட்ட பெரும் கடனுக்காக, மறுபிறவியில் காளையாய்ப் பிறந்து, உங்களுக்கு உழைத்து உழைத்து மடிவேன்" என்று. அவனது கடன் ஆவணத்தையும் நெருப் பிலிட்டார் செல்வர்.

இவ்வாறு ஒவ்வொருவராக வாக்களித்தனர். இறு தியில் ஒருவன் "பட்ட கடனைத் தீர்க்க அடுத்தப் பிறவியில் நான் உங்கள் தந்தையாகப் பிறக்க விரும்புகிறேன்" என்றான். இதனைக் கேட்டுத் திடுக்கிட்ட செல்வர். "உனக்கு எவ்வளவு ஆணவம் இருந்தால் இப்படிக் கூறுவாய் நீ, வாங்கிய கடனோ அளவுக்கதிகமானது. என்னை அவமா னப்படுத்தவே நீ முயல்கிறாய் என்று கூறி அவனை ஓங்கி அறையச் சென்றார். உடனே அந்த ஆள், "ஐயா, சற்றுப் பொறுமையாகக் கேளுங்கள். நான் உங்களுக்கு அதிகமாகக் கடன்பட்டிருப்பது உண்மைதான். மற்றவர்களைப் போல் குதிரையாகவோ காளையாகவோ பிறந்து உங்களுக்கு உழைத்து என் கடனைத் தீர்க்க முடியாது. எனவேதான் உங்கள் தந்தையாகத் தோன்றி, சிக்கனமாக வாழ்ந்து, செல்வத்தைச் சேமித்து ஒன்றையும் நுகராமல், வீடு, வாசல், நிலபுலம், காடு, கரை என்று ஏராளமாகத் தேடி வைத்து விட்டு நான் சாவேன். இப்படிச் செய்வதால் மட்டுமே நான்

பட்ட முழுக்கடனையும் உங்களுக்கு நான் திரும்பவும் மறு பிறவியில் அடைக்க முடியும்" என்று விளக்கம் தந்தான். விளக்கம் கேட்டுச் சிந்தை குளிர்ந்தார் செல்வர்.

## 61. நினைவுக்கல்


வாணி என்னும் பெயர் கொண்ட செல்வச் சீமாட்டி ஒருத்தியிருந்தாள். அவளுக்கு ஓர் ஆசை. தான் மரித்ததும், தன் கல்லறையில் பொய்யாய்ச் சில புகழுரைகள் பொறிக்கப் பட வேண்டும் என்று விரும்பினாள். அப்படிப்பட்ட புனைந் துரைஎய்ப் புனைந்துவர புலமையில் சிறந்த வித்தகன் ஒருவனிடம் வேண்டினாள். அவனும் எத்தனையோ தொடர் களை எழுதியெழுதிப் பார்த்து எவையும் பொருந்தாததால்



இறுதியில் இவ்வாறு எழுதினான். ''அரசுக் கல்லூரியில் புகழ் மிக்க முன்னாள் பேராசிரியரின் பக்கத்து வீட்டவளும், முன்னாள் நகர மேயரின் அடுத்த வீட்டவளுமாகிய திருமதி வாணி இங்கே ஓய்வு கொள்கிறார்''

## 62. எலிக்கும் ஈக்கும் இணக்கம் தெரிவித்தல்

எலியும், தேனீயும் இணைபிரியா உடன்பிறப்புகள் ஆயினர். அந்த இணைப்பில் இணைந்து கொள்ளும்படி பல்கலைக் கழகப் பட்டதாரி ஒருவர் அழைக்கப்பட்டார். அழைப்பிற்கு இணங்கி அக் கூட்டில் அவரும் ஓர் அங்க மானார்.



கூட்டில் முதலிடம் எலிக்கும், இரண்டாவது இடம் தேனீக்கும் மூன்றாவது இடம் பல்கலைக் கழகப் பட்டதாரிக்கும் வழங்கப்பட்டன. பட்டதாரி, எலிக்கும் தேனீக்கும் கீழாக மூன்றாவது இடம் கொடுக்கப்பட்டதைக் குறித்து கேட்ட போது, அந்த பட்டதாரி இளைஞன் சொன்னான் "அவ் இருவரில் ஒருவராகிய எலி சிறிய துளை (பொந்து) வழியாக நழுவிச் செல்லும் திறன் கொண்டது; தேனீயோ தன் கொடுக்கினால் (தும்பியினால்) பிறர் அரத்தத்தை உறிஞ்சி வாழ்வதில் சிறந்தது. எனவே தான் அவ் இருவருக்கும் பின்னால் மூன்றாவது இடம் வகிக்க இணங்கினேன்'' என்று.

## 63. ஊமையன் பேசுகிறான்

ஊமையன் போல் நடித்து ஊரெல்லாம் பிச்சையெடுத்து வாழ்ந்து வந்தான் ஒருவன். ஒருநாள் மது அருந்து



வதற்காக இரண்டு நாணயங்களோடு மதுக்கடைக்குள் புகுந்தான். மதுக்கடைக்காரன் அந்த இரண்டு காசுகளுக்குப் பிச்சைக்காரனின் திருவோட்டில் மது ஊற்றி நிரப்பினான். பிச்சைக்காரன் "இன்னும் கொஞ்சம் ஊற்றுங்கள்" என்று கேட்டான். 'இதற்கு முன் நீ பேசியதில்லையே; இப்போது மட்டும் எப்படி பேசுகிறாய்?" என்று வியந்து கேட்டான் மதுக் கடைக்காரன். பிச்சைக்காரனோ, இதற்குமுன் என்னிடம் பணம் கிடையாது. என்னால் எப்படிப் பேசமுடியும்? இப்போதோ என்னிடம் இரண்டு காசுகள் உள்ளன. எனவே எல்லாம் மாறிப்போயின" என்றான்.

## 64. இங்குப் பலமாக நாறுகிறது

முதிர்வயதான செல்வன் ஒருவன் விருந்தொன்று நடத்திக் கொண்டிருந்தான். திடீரென்று விருந்தினர்கள் இடையில் காற்றை வெளியே விட்டுவிட்டான் 'ஆ!' விருந் தினர்களில் ஒருவன் வியந்து கூவினான். "காற்று, போல் ஒலி எழுப்பினாலும் கடுநாற்றம் அடிக்கவில்லை" என்றான் அவன்.

"கடுநாற்றம் வீசாதது மட்டுமல்ல; அது நறுமணத் தைலம் போல் மணம் கமழ்கிறது" என்றான் வேறொருவன். புருவத்தை உயர்த்திய வண்ணம் "என்ன?" என்று வாடிய முகத்துடன் கேட்டான் செல்வன். மணமற்ற காற்றை ஒருவன் வெளிவிட்டால், அவன் உயிர் விரைவில் போய்விடும் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மைதானா? நான் நீண்ட நாள் உலகில் உயிர் வாழ்வேனா?" என்றெல்லாம் மேலும் கேட்டான் அந்தச் செல்வன்.



உடனே அந்த முதல் விருந்தினன் தன் கைகளால் முகத்திற்கெதிரே பலமாக வீசிக் கொண்டே 'இப்போது தான் கடுநாற்றம் காற்றில் பரவி இந்த வழியாக வருகிறது'' என்றான்.

இரண்டாம் ஆள் தன் மூக்கை விரல்களால் பலமாக (பொத்திக் கொண்டு) அழுத்தி மூடிக்கொண்டு, முகத்தைச் சுளித்த வண்ணம் "இப்போது தான் இங்குப் பலமாக நாற்ற மெடுக்கிறது!'' என்றான்.

## 65. சொல்லும் குறி தப்பிவிடும்

பத்தன் ஒருவன் ஆலயம் சென்று குருக்களிடம் தன் எதிர்காலம் பற்றி உரைக்கக் கேட்டான். குருக்களோ குறி

கேட்க வந்தவனிடம் "முதலில் நறுமணப் பொருளுக்குரிய காணிக்கையை வை. இல்லையெனில் சொல்லும் குறி, குறி தப்பிவிடும்" என்றார். "அப்படிப்பட்ட நன்கொடை இல்லாமல் சொல்லும் குறி அனைத்தும் நடக்காது" என்றார் மேலும்.

## 66. அழுகிய தட்டு

அரசு அதிகாரி ஒருவர் உயர் பதவியில் அமர்த்தப்பட்ட போது கடவுள் முன்னிலையில் பதவி உறுதிமொழி எடுத்துக் கொண்டார். "எனது இடது கையால் நான் கையூட்டு (இலஞ்சம்) பெற்றால் என் கண்களுக்கு முன்னாலேயே




அந்தக் கை அழுகட்டும். அவ்வாறே வலது கையால் பெற்றால் அதுவும், அழுகி அழிந்து போகட்டும்" என்று உறுதி செய்தார்.

சில நாள்களுக்குள்ளாகவே ஏராளமான தங்கக்கட்டிகளைக் கையூட்டாக ஒருவர் அவருக்கு வழங்கினார்.

வாக்குறுதி மொழிக்கு அஞ்சி அந்த அதிகாரி "நான் இந்தத் தட்டை உங்கள் முன் நீட்டுகிறேன். அதில் தங்கக் கட்டி களை வைத்துவிடுங்கள். அதுமட்டுமில்லை பதவி ஏற்ற போது பணத்தை இலஞ்சமாகப் பெறுவதைக் குறித்துத் தான் வாக்களித்தேனேயன்றி தங்கக் கட்டிகளைப் பெறுவதைப் பற்றியன்று. அப்படியே ஏதேனும் ஒன்று அழுக வேண்டு மானால் தட்டு அழுகிப்போகட்டுமே. எனெனில் தட்டுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பு கிடையாதே" என்றார்.

## 67. நான் உங்கள் வீட்டுப் பிள்ளை

பணக்கார முதியவர் ஒருவர் வலுவற்ற மெலிந்த உட லோடும் முதுமைத் தோற்றத்துடனும் காணப்பட்டார். யாரேனும் அவர் உடலின் வலுவின்மை பற்றியும் முதுமைத் தோற்றம் பற்றியும் குறிப்பிட்டால் அவர் மீது வெறுப்புக் கொள்வார். மாறாக அவர் காளை போன்ற கட்டுடல்



கொண்டவர் என்றும், கட்டழகு மிக்கவர் என்றும் யாரேனும் அவர் உடல் நலம் குறித்தும் தோற்றம் குறித்தும் மிகைப் படுத்திப் புகழ்ந்துரைத்தால் புளகாங்கிதம் அடைவார் அந்தப் பணக்கார முதியவர்.

இந்த உண்மையைப் புரிந்து கொண்ட ஒருவர் அவ ரிடம் சில நன்மைகள் பெறும் நோக்கத்துடன் "உங்கள் முடி நரைத்திருந்தாலும், உங்கள் மேனியழகோ கொள்ளையழகு குழந்தையழகு; அத்தனை மென்மை அத்தனைக் கவர்ச்சி இப்போது தான் பிறந்த குழந்தையின் மேனி உங்கள் திரு மேனி" என்று புகழ்ந்தார். "என் மேனி உண்மையில் குழந்தை போல் மென்மையாக இருக்குமாயின் உங்கள் குழந் தையாகவே நான் இருக்க விரும்புகிறேன்" என்று கிறுக்கில் உளறினார் அந்த முதியவர்.

## 68. பிறந்தநாள் வாழ்த்துகள்

முதியவர் ஒருவர் தமது நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடினார். வாழ்த்துகளும், பாராட்டுரைகளும் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. ப ர் பலவாறு வாழ்த்தினர். வந்திருந்தோரில் ஒருவர் "நீங்கள் 120 ஆண்டுகள் நீடுழி வாழ வேண்டும்" என்று வாழ்த்தினார். இந்த வாழ்த்துரைக் கேட்டதும், வாழ்த்தியவர் மீது சீறிப் பாய்ந்தார் முதியவர். "என்ன இது? உங்கள் வீட்டுப் பணத்திலா நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்? பின் ஏன் என் வாழ்வை 120 ஆண்டுகள் என்று குறைத்து வாழ்த்தினீர். 150 அதற்கு மேலும் அதிகமான ஆண்டுகள் வாழவேண்டும் என்று ஏன் நீங்கள் வாழ்த்தவில்லை?" என்று அடுக்கடுக்காய்க் கேள்வி களை அடக்க முடியாமல் அடுக்கித் தள்ளினார் அந்த முதியவர்.


# 69. மிகைப்படுத்துதல்

இரண்டு மனிதர்கள் சந்தித்தபோது வெறுப்போடு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். "ஏன் உன் முகம் கடுகடுத்துக் காணப்படுகிறது" என்றான் ஒருவன். மற்றவன் சொன்னான், "நான் நாட்டின் இடையில் வாழ்கிறேன் எந்த ஒலியும் என் காதில் விழாதிருப்பதில்லை. நாட்டின் எந்தச் செய்தியும் எனக்கு எட்டாமல் போவதில்லை. பின்னிரவில் ஊழ்கத்தில் அமர்ந்திருக்கும் வேளை, மேலை வானகத்தில் எழுப்பிய பௌத்த துறவியின் வேத ஒலிகள் என் உயிர் அமைதியை அழித்து விடுகின்றன. எத்தனைதான் வேண்டி னாலும், என் வேண்டுதலை அவர் புறக்கணித்து விடுகிறார். சினத்தில் மாமேரு மலையை எடுத்துச் சிறிய கல்லென நினைத்து எறிந்தேன். முற்றிலும் எதிர்பாராத வகையில், கல் தன்னை நோக்கி வருவதைக் கண்ட துறவி தன் கண்களைத் துடைத்தவாறு சொன்னார், "என் பார்வையைக் கெடுக்க எங்கிருந்து வருகிறது இந்த தூசி?" என்று கேட்டார். பின் மந்திரம் ஒலிப்பதைத் தொடர்ந்தார், எந்த விதச் சலனமு மின்றி, எனது முயற்சி சிறிது கூட அவரைத் தாக்கவில்லை."

பின்னர் இந்த மனிதன், அந்த மனிதனிடம் "ஆமாம் உங்கள் முகமும் கடுத்திருக்கிறதே காரணம் என்னவோ?" நேற்று என் வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்திருந்தார். அவ ருக்கு உண்ணக் கொடுக்க அந்த நேரத்தில் வீட்டில் ஒன்று மில்லை. எனவே கொசு ஒன்றினை நேரம் பார்த்துப் பிடித்து அதன் நெஞ்சத்தையும் ஈரலையும் பதமாய் வெட்டியெடுத்து தூய்மை செய்து வறுத்து உண்ணக் கொடுத்தேன். யார் எதிர் பார்க்க முடியும்? ஈரல் துண்டுகளில் ஒன்று அவர் தொண்டையில் சிக்கிக் கொள்ளும் என்று. துண்டுகள் பெரி

தாயிருந்ததால் சிக்கிக் கொண்டன என்றான் விருந்தினர். ஓயாது என்னைக் காணும்போதெல்லாம் அதையே குறை யாக முறையிடுகிறார்." என்று.


"எப்படி அந்த மனிதனுக்கு அத்துனைச் சிறிய தொண்டையிருந்தது?" என்றான் முன்னவன். பின்னவன்



சொன்னான் "பல நூறு கற்களுப்பால் துறவி எழுப்பிய மந்திர ஒலி உங்கள் காதில் எப்படி விழுந்ததோ, அத்தனை பெரிய மாமேருமலை இத்தனைச் சிறிய தூசியா துறவியின் கண்ணில் எப்படிப் பட்டதோ அப்படியே தான். இந்த விருந் தினருக்கும் இத்தனைச் சிறிய தொண்டை அமைந்தது" என்றான். அதிர்ந்தான் முன்னவன். அகன்றான் அவ் இடத்தை விட்டு.

## 70. சீருடைகள் வழங்கப்பட்டன

விருந்தினர் ஒருவர் வரவேற்பறையில் அமர்ந்தி ருந்தார். வீட்டு வேலைக்காரன் முன்னும் பின்னுமாக இரண்டு ஓடுகளை தன் இரண்டு மறைவிடங்களில் கட்டிக் கொண்டு, தேநீர் எடுத்து வந்தான். "விருந்தினர் முன்னி லையில் இப்படி கடினமான ஆடையை உடுத்தி வரலாமா?



சென்று மெல்லிய ஆடை அணிந்து வா," என்று சீற்றம் கொண்டார் முதலாளி. உள்ளே சென்ற வேலைக்காரன் ஓடு களுக்கு மாற்றாகத் தாமரை இலைகள் இரண்டினை அவ் இ டங்களில் உடுத்திச் சற்று நேரத்தில் மீண்டும் வரவேற்பறைக்கு வந்தால்... கவனித்துக் கொண்டிருந்த விருந்தினர், "வாழ்க்கை உங்கள் இல்லத்தில் மிகவும் கண்ணியக் குறைவாக உள்ளது" என்றார். செலவைக் குறைக்க இந்த நடவடிக்கையோ என்று மேலும் வின வினான். முதலாளி, "இல்லை இல்லை இது கண்ணியக் குறைவானது அல்ல" என்று மறுப்புத் தெரிவித்தார். "சான்றுக்கு உங்கள் வேலைக்காரனை எடுத்துக் கொள்ள லாமே" என்று சுட்டிக்காட்டினார் விருந்தினர். அவர் மேலும் சொன்னார், "அவனிடம் ஒரு தடித்த ஆடையும், மெல்லிய ஆடை ஒன்றுமே உள்ளன. இதைத் தவிர வேறு எந்த ஏற்பா டுகளும் நீங்கள் செய்யவில்லை என்றே தோன்றுகிறது. இவையெல்லாம் செலவை நினைத்தா? என்று. "முதல் முறையாக அவனை நான் தேர்வு செய்யும்போது, உணவுக்கு (சாப்பாட்டிற்கு) தன் வீட்டிற்குச் சென்றுவிடுவதாகவும், சீருடை மட்டும் நான் கொடுத்தால் போதும் என்றும் ஒப்பந்தம் செய்துள்ளான். குறைந்தது இரண்டு வகை சீருடை வழங்கவில்லையெனில், ஒப்பந்தத்தின் கட்டளை நிறைவேற்றுவது கடினமாக இருக்குமல்லவா?" என்றான் வீட்டின் முதலாளி பெருமிதத்துடன்.

## 71. பிச்சைக்காரர்களும் நாய்களும்

"உன்னைக் கண்டதுமே நாய்கள் உன்னைக் கடிக்க வருகின்றதே ஏன்?" என்று ஒருவன் பிச்சைக்காரனிடம் கேட்டான். "ஏனெனில் ஆடையைப் பார்த்தே நாய்கள் மனி

தனை மதிக்கச் செய்கின்றன" என்று விடை அளித்தான் அந்தப் பிச்சைக்காரன்.

## 72. கழிவாய் புகையே

வயது முதிர்ந்த செல்வன் ஒருவர் வீட்டு வேலை களைக் கவனிக்க எந்த வேலைக்காரர்களையும் அமர்த்தாமல் அனைத்து வேலைகளையும் அவரே மிகவும் தொல்லையுடன் தனித்துச் செய்துவந்தார். நண்பர்கள் எல்லாம் அப் பணிகளைச் செய்ய வேலைக்காரன் ஒருவனை அமர்த்தும்படி வற்புறுத்தி வந்தார்கள். ஆனால் அந்தச்



சீமானோ எப்போதும் "வேலைக்காரர்களால் ஏற்படும் நன்மைகளை நான் நன்கறிவேன். ஆனால் அவர்களுக்குக் கூலியும், உண்ண உணவும் கொடுக்க வேண்டுமே. ஆகவே தான் என் பணிகளை நானே செய்துவருகிறேன். வேலைக்கா ரர்கள் யாரையும் நியமிக்கவில்லை என்று விடையளித்து வந்தார்.


எப்படியேனும் செல்வருக்கு ஒரு வேலைக்காரனை அமர்த்தி விட வேண்டும் என்ற எண்ணத்தில் நண்பர் ஒருவர், "என்னுடைய வீட்டில் நான் ஒரு வேலைக்காரன் வைத்திருக்கிறேன். அவனுக்கு உணவோ கூலியோ கொடுக்கத் தேவையில்லை. எனினும் அவன் திறமையாக பணிகளைச் செய்வான். உங்களுக்குப் பணிபுரிய நான் அவனை இலவயமாகத் தருகிறேன். நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?" என்றார். சற்று நேரச் சிந்தனைக்குப்பின் செல்வர் கேட்டார். "உணவு உண்ணவில்லை என்றால் அவன் இறந்துவிட மாட்டானா?" என்று. "இந்த வேலைக் காரன் சிறுவனாய் இருக்கும்போது தேவதை ஒன்றைச் சந்தித்தானாம். அந்தத் தேவதை இவனுக்குக் காற்றை உண்டு, புகையை வெளியிட்டிடு, என்று வேறு எதையும் புசியாது வாழும் வரம் நல்கினாளாம். எனவே அவனுக்குப் பசியெடுப்பதே இல்லை" என்று விடையளித்தார் நண்பர்.

அதனைக் கேட்டதும் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார் அந்தச் செல்வர். பின் மெதுவாய்ச் சொன்னார் "வேண்டாம் மிக்க நன்றி எனக்கு அப்படிப்பட்ட வேலைக் காரன் வேண்டாம்" என்று. "ஏன்?" என்றார் நண்பர். "எனது கழனிகளுக்கு வேண்டிய உரத்தில் ஒரு பகுதியையாவது அந்த வேலைக்காரனின் கழிவில் இருந்து(மலம்) பெறலாம் என்று எண்ணினேன். ஆனால் நீங்கள் சொல்கின்ற வேலைக்

காரனோ புகையை மட்டுமே வெளியேற்றுகின்றார். அவனால் எனக்கு எந்தப் பயனும் இல்லை என்றே அஞ்சுகிறேன்'' என்றார் செல்வர். செய்வதறியாது திகைத்தார் நண்பர்.

## 73. விடை சொல்லும் பாங்கு

விடை சொல்லும் பாங்கினைப் பற்றிப் பக்குவமாய்த் தம் மகனுக்கு விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார் ஒருவர். புரியாது விழித்துக் கொண்டிருந்த மகன் புரியும்படி சொல்லுங்கள் என்று விளக்கம் கேட்டான். அந்த நேரம் பார்த்துப் பக்கத்து வீட்டுக்காரர் ஏதோ ஒன்றை இரவலாகப் பெற்றுச் செல்ல அங்கு வந்தார். அந்த நேரத்தைப் பயன் படுத்திக் கொண்டு, தந்தை சொன்னார் ''யாராவது



உன்னிடம் வந்து ஏதாவது ஒரு பொருள் வேண்டும் என்று கேட்டால் முற்றிலும் 'உண்டு' என்றோ 'இல்லை' என்றோ விடை சொல்லக்கூடாது. கொஞ்சம் உண்டு; கொஞ்சம் இல்லை என்று பதில் தரவேண்டும்'' என்றார். தந்தை சொன்னதை மனத்திலிருத்திக் கொண்டான் மகன்.

சில நாள்களுக்குப்பின் யாரோ ஒருவர் வந்து "உன் தந்தை இருக்கிறாரா?'' என்று கேட்டபோது "கொஞ்சம் இருக்கிறார்; கொஞ்சம் இல்லை'' என்றான் தந்தை சொல் தட்டாத தனயன். என்னே அவனின் பதில் சொல்லும் பாங்கு.

## 74. இறப்பை வெல்லும் மூலிகை

"என்னைக் குணமாக்கும் திறமையான மருத்துவர் எவரேனும் இருப்பின் அவருக்கு இறப்பினையே வெல்லும் மூலிகை ஒன்றினை நன்றிக் கடனாகக் கொடுப்பேன். எனது மூலிகை ஒருவனைப் பலநூறு ஆண்டுகள் வாழ வைக்கும் என்று சொல்லி மருத்துவர் ஒருவரை அழைத்து வாருங்கள்'' என்று கேட்டுக் கொண்டார் சாவுப் படுக்கையிலிருந்த மருத்துவர் ஒருவர்.

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் "ஏன்? அப்படிபட்ட அற்புத மூலிகையிருப்பின் இவரே அதனைப் பயன்படுத்தித் தம்மைக் காத்துக் கொள்ளலாமே?'' என்று கேட்டார்.

இறக்கப்போகும் சாவுப்படுக்கையில் இருந்த மருத்துவர் சொன்னார், "ஒரு நல்ல மருத்துவன் தனக்குத் தானே மருந்து கொடுத்துக் கொள்ளமாட்டான்'' என்று.

# 75. அறிஞனின் தீர்ப்பு

செல்வன் ஆக வேண்டும் என்ற தனது ஆசையை வெளிப்படுத்தினான் ஒரு சிற்றூரான். நூறு காணி நஞ்சை நிலம் வாங்கினால்தான் நான் நிறைவடைவேன் என்று உறுதி எடுத்துக் கொண்டான் அவன். இதனைக் கேள்வி யுற்ற அவனது அண்டை வீட்டான் "நீ நூறு காணி நஞ்சை நிலம் வாங்கி விடுவாயானால், அதில் விளையும் நெல் அனைத்தையும் வாங்கப் பல இலக்கம் பணம் சேர்த்து விடுவேன்" என்று எதிர் அறைகூவலும் உறுதியும் செய்தான். இருவருக்கும் இடையே வாக்குவாதம் முற்றியது.




நான் நூறு காணி வாங்கிவிடுவேன் என்று ஒருவனும், அவற்றின் விளைச்சலை பல இலக்கம் சேர்த்து நான் வாங்கி விடுவேன் என்று மாறிமாறிப் பேசினர். இருவரும் தங்கள் வழக்கை நீதிமன்றம் எடுத்துச் செல்ல முடிவு செய்து பட்டணம் சென்றனர். இருவருமே அதுவரை பட்டணம் சென்று நீதிமன்றத்தைப் பார்த்து அறியாதவர்கள். எனவே செல்லும் வழியில் ஒரு சிவப்பு நிறக் கட்டிடத்தைக் கண்டு அது தான் நீதிமன்றம் என நினைத்து உள்ளே நுழைந்தனர். அந்தக் கட்டிடமோ அறிஞர் பூங்குன்றனின் மெய்மை ஆய்வுக் கூடமாயிருந்தது. பல மாணவர்களும் அறிஞர்களும் அங்குத் தங்கி ஆய்வு செய்து வந்தனர். இவர்கள் செல்லும் வேளையில் அம் மண்டபத்தின் முகப்பில் அறிஞர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர்தான் நீதிபதி என நினைத்து, சிற்றூர்க்காரர் இருவரும் தங்கள் வழக்கையுரைத்தனர். வழக்கைக் கேட்டபின் அறிஞர் சொன்னார், "முதலில் நீங்கள் இருவரும் அவரவர் சம்பாதிக்க நினைப்பதைச் சம்பா தியுங்கள். நானும் நீதிபதியானவுடன் என் தீர்ப்பைச் சொல்லு கிறேன்" என்று.

## 76. தோலைக் கெடுத்துவிடாதே

புலிவாயில் விழுந்த ஒரு மனிதனைக் காக்க அவன் மகன் கத்தி ஒன்றினை எடுத்துப் புலியினைக் குத்திக் கொல்லப் பாய்ந்து வந்தான். பாய்ந்து வரும் மகனைப் பார்த்துப் புலி வாயில் அகப்பட்ட மனிதன் "மகனே, ஆத்திரப்பட்டுப் புலியின் மீது கண்டவிடத்தில் குத்தி அதன் தோலினைச் சேதப்படுத்தி விடாதே. அதன் காலடி யிலிருந்து வெட்டத் தொடங்கிப் பின்னர் அதன் உட லினைப் பிளந்துவிடு." என்று ஆய்வுரை கூறினான்.

# 77. அரசனும் அரச உடையும்


தலை நகரிலிருந்து திரும்பிய பிச்சைக்காரன் மா மன்னனைத் தான் பார்த்த பெருமையினைப் பறைசாற்றிக் கொண்டிருந்தான். அரசன் அணிந்திருந்த உடையினைப் பற்றி அவனிடம் கேட்டபோது, அவன் சொன்னான், "பச்சை மரகதக் கற்கள் பதிக்கப்பட்ட மகுடமும் தங்கத் தகடுகளால் ஆன உடையினையும் அணிந்திருந்தார்" என்று. "தங்கத் தகடுகளால் ஆன உடைய்யை அணிந்திருந்தால் அவரால் எப்படி குனிந்து தொழுதிட முடியும்?" என்றான். பிச்சைக் காரன் இதனைக் கேட்டு நகைத்தான், பின்னர் சொன்னான் 'உனக்கு இந்த உலகத்தைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. மன்னர் குனிந்து தொழவேண்டிய மனிதர் யாரும் இல்லை" என்று.



## 78. வேதத் தலைவனுக்குத் தகுந்த இடம்

கோயிலின் சிறப்பு மண்டபத்தில் இடப் புறத்தில் சிவபொருமானின் சிலையும் வலப்புறத்தே புத்த பெருமானின் திருஉருவச் சிலையும் அமைக்கப்பட்டிருந் தன. அவ் இரு சிலைகளும் அமைக்கப்பட்டுள்ள இடங்களை உற்றுக் கவனித்த பௌத்த துறவி ஒருவர் எம்பெருமான் தொண்டர்கள் உலகெலாம் பரவியுள்ளர். அப்படிப்பட்ட புகழ்மிக்க புத்தனை சிவனின் வலப்புறத்தே அமைத்தேன்?" என்று வினவினார்.

பின்னர் புத்தனை இடப்புறத்தும் சிவனை வலப்பு றத்தும். மாற்றி அமைத்துவிட்டுச் சென்றார். சற்று நேரத் திற்குப் பின் சைவ மதகுரு ஒருவர் அங்கே வந்தார்.




சிலைகள் அமைந்திருக்கும் வண்ணம் கண்டார். சினம் கொண்டார். அவர் சொன்னார்'' நமது நாட்டில் சைவத் தொண்டர்கள் மிகவும் புனிதமானவர்கள். அப்படியிருக்கச் சிவனின் சிலையைப் புத்தனின் வலப்புறம் அமைத்தது ஏன்? என்று வினவினார். மீண்டும் அச் சிலைகளை இடம் மாற்றி அமைத்துவிட்டு அவர் அவ்விடம் விட்டு அகன்றார். அவர் அகன்றதும் மீண்டும் பௌத்தத் துறவி வந்தார். சிலை களின் இருப்பிடத்தை மாற்றியமைத்தார். இவ்வாறு மாறி மாறி இரு சமயத்தினரும் சிலைகளை மாற்றி மாற்றி அமைத் தனர். இறுதியில் அவை இரண்டுமே மண் சிலைகள் ஆனதால் கீழே விழுந்து நொறுங்கின. கீழே விழுந்து நொறுங்கிக் கிடந்த சிவனின் நொறுங்கிக் கிடக்கும் புத்தனைப் பார்த்துப் புன்னகைத்தார். பின் அவர் "முன்பு நாம் இருந்த வண்ணமே அவரவர் இடத்தில் அமர்ந்து நமது பணிகளைச் செய்தோம். இப்போதோ நமது அடியார்கள் நமது அழிவுக்கு அவர்கள்தாம் காரணம்'' என்பதை மெய்ப்பித்து விட்டனர்'' என்று துயரத்தோடு சொன்னார்.

## 79. அழகற்ற நிலவு

மற்றவர்களோடு உரையாடும் போது, அடக்கமாகப் பேசும் பழக்கமுள்ள ஒரு மனிதர் இருந்தார். ஒருமுறை அவர் வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்தார். அந்திக் கருக்கலில் அழகு நிலவினைக் கண்ட அந்த விருந்திரனர் "ஆ என்ன அழகான நிலவு'' என்று வியந்துரைத்தார். உடனே அடக்கமா கவே பேசும் அந்த வீட்டுக்காரர் கைகட்டி, வாய்பொத்தி மிகவும் அடக்கத்தோடு "என்னை நீங்கள் மிகவும் புகழ் கிறீர்கள். என் எளிய குடிலில் நிலவுக்குக் கூடப் பெருமை கிடையாது'' என்றார்.

## 80. மூடன்

இரண்டு உடன்பிறந்தவர்கள் நண்பர் ஒருவரைச் சந்திக்கச் சென்றனர். நண்பர் வீட்டின் ஒரு பலகையின் அருகில் கிடந்த இருக்கைகளில் இருவரும் அமர்ந்தனர். பலகையின் மீது உலர்ந்த அத்திப் பழங்கள் வைக்கப்பட்டிருந்தன. அதுவரை அந்தப் பழங்களைப் பார்த்தறியாத இளையவன் அண்ணனிடம் அவை என்னவோ என்று கேட்டான். அண்ணன் "முட்டாள்!" என்று சொன்னான். பின்னர் கொடிமுந்திரப் பழங்கள் பரிமாறப்பட்டன. மீண்டும் இளையவன் அண்ணனிடம் "அது என்ன?" என்று வினவினான். அண்ணன் மீண்டும் அதே விடையைச் சொன்னான்.



பின்னர் அவர்கள் இருவரும் நண்பரிடம் விடை பெற்று வெளியே வாயலில் வந்தபோது, தம்பி அண்ணனிடம் சொன்னான் "முதலில் கொடுத்த முட்டாள்கள் மெல்லக் கடினமாயிருந்தன. ஆனால் அவைதாம் சுவையாயிருந்தன. இரண்டாவது கொடுத்த முட்டாள்களோ நாவில் சுவைக்க வேயில்லை" என்று.

## 81. மதுக்கோப்பையை அறுத்தல்

அழைப்பிற்கிணங்கி விருந்தொன்றிற்குச் சென்றார் ஒருவர். விருந்துக்கழைத்த நண்பரோ ஒவ்வொரு முறையும் மதுக் கிண்ணத்தில் அரைக் கிண்ணம் அளவே மது ஊற்றிக் கொடுத்தார். விருந்தினரோ அவர் செயல் கண்டு வெறுப் புற்றார். அளவுக்கு மிஞ்சிய வெறுப்பில் அவர் கேட்டார். "உங்களிடம் வாள்(ரம்பம்) இருக்கின்றதா? இருந்தால் கொஞ்சநேரம். இரவல் கொடுங்களேன்" என்று கேட்டார்.



“ஏன்? எதற்கு?’ என்றார் விருந்து கொடுத்த நண்பர். விருந் தினர் சொன்னார் “நீங்கள் மதுக் கிண்ணத்தில் பாதியளவே மதுவினை ஊற்றுகிறீர்கள். கிண்ணத்தில் எஞ்சிய பாதி பய னற்று வீணாய் தானே உள்ளது. அந்தப் பயனற்ற கிண்ணத்தில் மேல்பாதியை வெட்டித் தள்ளிவிடலாம் அல்லவா?” என்று.

## 82. வேதனை ஒன்று

விருந்தொன்றில் வந்த விருந்தினர்களில் ஒருவர் அகன்ற பெரிய தட்டில் பரிமாறப்பட்ட வாதுமைப் பருப்பில் பாதியை ஒரே கவளத்தில் அள்ளி விழுங்கினார் விரைவாக. இதனைக் கண்ட விருந்தளித்தவன் ‘ஏன் இப்படி விரைவாகச் சாப்பிடுகிறீர்கள்?’ என்று கேட்டபோது அவர் சொன்னார் ‘வாதுமைப் பருப்பு’ நெஞ்சாங்குலைக்கு நல்லது’ என்று. இதனைக் கேட்ட விருந்து கொடுத்தவன் “உணவை நன்றாக உண்டு ஐயமின்றி நீங்கள் உங்கள் நெஞ்சத்தைப் பாதுகாத்துக் கொள்கின்றீர்கள். ஆனால் என் நெஞ்சம் வேத னைப்படுகிறதே” என்று எதிர்வினா எழுபப்பினார் விருந்த ளித்தவர்.

## 83. கூன் விழுந்த முதுகு

“கூனினை நிமிரச் செய்து அற்புத நலமளிக்கும் வியப்புறு சிகிச்சை; கூனர்கள் நடக்கவும்; குணம் பெறவும்” என்ற மருத்துவர் ஒருவரின் விளம்பரத்தை நம்பி, தன் கூனை நிமிரச் செய்ய அந்த மருத்துவரை நாடினார் ஒருவர். மருத்து வரும் அவரை அன்போடு வரவேற்றுச் சிகிச்சையைத்

தொடங்கினார். நீண்ட பலகை ஒன்றினில் நோயாளியைப் படுக்கச் செய்தார். வேறொரு நீண்ட பலகையை அவர் மீது வைத்தார். மேலொன்றும் கீழொன்றுமாக இரண்டு பலகைகளுக்கிடையே இப்போது நோயாளி படுத்திருந்தார். இரண்டு பலகைகளின் விளிம்புகளைக் கயிற்றால் கட்டி மெல்ல மெல்ல கட்டுகளை இறுக்கினார். பலகைகள் ஒன்றை நோக்கி மற்றொன்று நகர்ந்து இடையில் கிடந்த மனிதனை நெருங்கின. பின்னர் நசுக்கின. வேதனை தாங்காது நோயாளி கட்டுகளை இறுக்குவதை நிறுத்தச் சொல்லிக் கதறினார். மருத்துவரோ அவர் கதறுதலைத் தம் காதில் போட்டுக் கொள்ளாமல் தம் வைத்தியத்தை தொடர்ந்தார். சற்று நேரத்தில் கதறல் நின்றது. தற்போது பலகைகளின் கட்டுகளை அவிழ்த்துப் பலகையை நீக்கினார். கூன் நேராக நிமிர்ந்திருந்தது. நோயாளியும் கூன் மட்டும் நிமிரவில்லை கை கால்கள் அனைத்துமே நீட்டி நிமிர்ந்த வண்ணம் மடக்க முடியாமல் இருந்தன. கூன் குணமானது. ஆனால் நோயாளி இறந்து போனான்.

உறவினர் கொதித்தனர். மருத்துவரை உதைத்தனர். உதைகளுக்கிடையே மருத்துவர் "நான் கூனை நிமித்துவதாகத்தான் சொன்னேன் அப்போது யாரும் என்னிடம் அவருடைய உயிரையும் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லவில்லையே" என்றார்.


## 84. அம்பினை அகற்றச் சென்றவன் வம்பினில் அகப்பட்டான்

வீரன் ஒருவனின் உடம்பில் அம்பொன்று தைத்தது. ஆழமாகத் தைத்த அம்பினை அகற்ற மருவரிடம் கொண்டு

அந்த அறுவைச் சிகிச்சை வல்லுனரோ "நான் உடம்பின் வெளியே உள்ள பகுதிகளை அறுப்பதிலும் அகற்றுவதிலும் தான் வல்லுனன். அதனை நான் செம்மையாகச் செய்து விட்டேன். இப்போது நீங்கள் உடம்பின் உட்பகுதிகளை அறுவைச் சிகிச்சை செய்யும் வல்லுனரை நாடுங்கள்" என்று ஆய்வுரை வழங்கினார்.

## 85. குருதிக் கொடை

பிறவுயிர்களுக்குத் தன் அரத்தத்தை (குருதி) அளித்து அவற்றை வாழவைக்க நினைத்தார் பௌத்தத் துறவியொருவர். நினைத்த வண்ணமே கொசுக்களைத் தன் குருதியை உறிஞ்சி உயிர்வாழ அனுமதித்தார். சில நாள்கள் கொசுக்கள் பல்கிப் பெருகின. அவரால் கொசுக்கடியைத் தாங்க முடியவில்லை. கடி தாங்காத துறவி தன் கைகளால் கொசு கடிக்கும் இடங்களில் பட்டு, பட்டு' என்று அடித்துக் கொண்டார். இப்படித் தம் உடம்பை தாமே அடித்துக் கொண்டிருக்கும் நிலைகண்டு திகைப்புற்ற வழிப்போக்கன் ஒருவன் துறவி



யிடம் "கொசுக்களுக்கு அரத்தக் கொடை செய்வதாக உறுதி யெடுத்துக் கொண்ட நீங்கள் இப்படி அவைகளை அடித்து விரட்டலாமா?" என்று கேட்டார். "ஏனெனில் சில கொசுக்கள் மீண்டும் மீண்டும் வருகின்றன" என்றார் துறவி.

## 86. தெருப் பாடகன்

தெருவிலே ஒருவன் தன் தடாரியைத் தட்டத் தொடங்கினான். பலரும் அவன் மண்முழா தான் வாசிக்கப் போகிறான் என்று எண்ணிக் கொண்டு அவன் இசையைச் சுவைக்க அவனைச் சுற்றிக் குழுமினர். ஆனால் இசைக் கலைஞன் தன் தடாரியைத் தட்டத் தொடங்கியதும் இசையில் இனிமையில்லாததால் குழுமிய கூட்டம் கலைந் தது. ஒரே ஒருவர் மட்டும் அங்கு இறுதிவரை நின்று கொண்டிருந்தார். இறுதிவரை தன் அருகில் நின்று கொண்டி ருந்த அந்த மனிதரைக் கண்டு 'நம் இசையை சுவைக்க இவர் ஒருவர் இருக்கிறாரே. எனவே என் இசை அறிவு வீண்போக வில்லை' என்று மகிழ்ந்து கூறினார் இசைக் கலைஞர். அதனைக் கேட்டு, அந்த மனிதன் "என் நிலைப்பலகையை மட்டும் நான் உங்களுக்கு மேடையாக தராவிட்டால் நானும் இங்கிருந்து எப்போதோ போயிருப்பேன்" என்று சொன்னார்.

## 87. திருடனின் மேலாடை திருடப்பட்டது

மணத்துணைவர் (தம்பதிகள்) தூங்கிக் கொண்டி ருந்த அறையினுள் புகுந்தான் திருடன். அவர்கள் வீட்டில் திருடுவதற்கு வேறெதுவும் இல்லாமல், ஒரே ஒரு

பானையில் அரிசி நிரப்பப்பட்டு அவர்கள் படுக்கை அறையில் அது வைக்கப்பட்டிருந்ததால் அதனைத் திருட அங்குப் புகுந்தான் அந்தத் திருடன். பானையிலிருந்த அரிசியைத் திருடி, வீட்டிற்கு எடுத்துச் சென்று சமைத் துண்ண நினைத்தான் திருடன்.

ஆனால் அரிசியைக் கட்டி எடுத்துச் செல்ல அங்கு வேறெதுவும் இல்லாததால், தன் மேலாடையில் முழு அரிசியைக் கொட்டிக் கட்டி எடுத்துச் செல்ல நினைத்துத், தன் மேலாடையைக் கழற்றித் தரையில் விரித்தான். பின் பானையின் பக்கம் திரும்பி அதனைத் தூக்க முனைந்த போது, விழிந்துக் கொண்ட கணவன் தன்கையை நீட்டி திருடனின் மேலாடையை மெதுவாய் எடுத்துத் தன் படுக்கையின் அடியில் மறைத்து வைத்துக் கொண்டு தூங்குவது போல் பாவனை செய்தான். பானையைத் தூக்கி அதிலிருந்த அரிசியை மேலாடையில் கொட்ட வந்த திருடன் தான் ஆடையை விரித்திருந்த இடத்தில் காணமல் திடுக்கிட்டுத் திகைத்தான். அந்த நேரம் பார்த்து மனைவி விழித்துக் கொண்டாள். கணவனை எழுப்பி ஏதோ ஓர் உருவம் அறையினுள் நடமாடுவதை அவனுக்கு உணர்த்தினாள். கணவன் "நான் நீண்ட நேரமாக விழித்துக் கொண்டு தான் இருக்கிறேன் இங்குத் திருடன் யாரும் இங்கு இல்லை" என்றான். 'என்ன?' திருடன் கூவினான். 'என் மேலாடை இங்கு திருடு போய்விட்டது. திருடன் யாரும் இங்கு இல்லை என்று நீ எப்படிச் சொல்லலாம்? என்றான் அந்த உண்மைத் திருடன்.

## 88. உப்பிட்ட முட்டைகள்

ஒரு நாள் உப்பிட்ட முட்டைகளை இருவர் தின்று கொண்டிருந்தனர். அப்போது ஒருவன் "பொதுவாக

முட்டைக்குச் சிறப்பான மணமோ, சுவையோ இல்லை என்றுதான் நான் இந்நாள் வரை நினைத்திருந்தேன். ஆனால் இந்த முட்டைகள் சுவையாகவும் உப்பாகவும் இருக்கின்றனவே" என்றான். "நல்லவேளை இந்த உண்மையை நீ கண்டு பிடிக்கும் போது என்னோடு இருக்கிறாய். நான் உனக்கு முழு உண்மையையும் விளக்குகிறேன். எனெனில் எனக்கு அவற்றைப் பற்றி நன்றாகத் தெரியும். இந்த முட்டைகள் உப்புக் கோழிகளிடமிருந்து கிடைக்கிறது, எனவே தான் உப்பாயிருக்கிறது" என்று விளக்கம் தந்தான் முன்னவனுக்குப் பின்னவன்.

## 89. தவறான மருத்துவம்

நோயாளியை ஆய்வுசெய்த மருத்துவர் ஒருவர் வீட்டிற்கு அழைக்கப்பட்டார். ஆய்வுசெய்தபின் மருத்துவர் சொன்னார் "பயப்படும்படி எதுவுமில்லை, எனினும் முழு ஓய்வு தேவை. சில நாள்கள் படுக்கையில் ஓய்வெடுப்பது நல்லது" என்று. ஆனால் சில நாள்களுக்குள்ளாகவே அந்த நோயாளி இறந்துவிட்டார். சினமுற்ற நோயாளியின் குடும்பத்தினர் தங்கள் வேலைக்காரனை அனுப்பி மருத்துவரை வசைபாடி விட்டு வரும்படி அனுப்பினர்.

வேலைக்காரனோ சிறிது நேரத்திலேயே திரும்பி வந்தான். "என்ன, அவரை நன்றாக வசைபாடினாயா?" என்று கேட்டனர். "இல்லை" என்றான் அவன். "ஏன்?" என்றனர் அவர்கள். அவன் சொன்னான் "மருத்துவரைச் சூழ்ந்து பெரும் கூட்டம் நின்று பல்வேறு வகைகளில் அவரை அனைவரும் வசைபாடிக் கொண்டிருந்தனர். அக் கூட்டத்தை விலக்கி அருகில் சென்று அவரை வாயார வசை

பாட முடியாமல் திரும்பி விட்டேன்'' என்றான் வேலைக் காரன்.

## 90. குளிர் நீர் ஊற்று

''என் உள்ளம் குளிர்ந்தது'' என்று தன் மனைவியிடம் கூறினான் ஒரு மனிதன். ''நீங்கள் சொல்லுவதின் பொருள் என்ன?'' என்று புரியாது வினவினாள் மனைவி. இப்போது தான் நான் குளிர்நீர் ஊற்றில் என் உள்ளத்தைக் கழுவினேன். எனவே என் உள்ளம் குளிராவிட்டால் அந்த நீர் ஊற்றுக்கு அதன் பெயர் பொருந்தாது போய்விடுமே'' என்று தன் மனை விக்குப் பொருள் புரியும்படி அருள்புரிந்தான் அந்தக் கணவன்.

## 91. கனவில் கண்ட காரிகை

இளைஞன் ஒருவன் இரவில் கனவொன்று கண்டான். காலையில் எழுந்ததும் பணிப் பெண்ணை அழைத்தான். ''நேற்றிரவு என்னை நீ கனவில் கண்டாயா?'' 'இல்லை' என்றாள். வேறெதுவும் அவள் சொல்லவில்லை.

சீற்றமுற்றான் இளைஞன். ''நான் என் கனவில் உன்னைக் கண்டேன் என்பது முற்றிலும் உண்மை? அப்படி யாயின் நீ மட்டும் என்னைக் காணவில்லை என்று எப்படிப் பொய் சொல்லலாம்' என்று சொல்லிய வண்ணம் அம்மாவின் அறைக்குச் சென்று அம்மாவிடம் ''அம்மா, உன்றன் பணிப் பெண் தண்டனைக்குரியவள். நேற்றிரவு அவளை நான் கனவில் கண்டு காதல் கொண்டேன். ஆனால்

அவளோ என்னை காணவில்லையென்று பொய் சொல்லு கிறாள்'' என்று முறையிட்டான்.

## 92. மறதி

ஒரு மாநிலத்தின் தலைமை நீதிபதியாக ஒருவர் நிய மிக்கப்பட்டார். பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன், நகரவாயிலில் முடிதிருத்தகம் வைத்திருந்த ஒரு முடிதிருத்து பவனை அழைத்துவர ஆணை பிறப்பித்தார். அவ்வாறே அவனும் அழைத்து வரப்பட்டான். பின்னர் எவ்வித உசாவல் ஏதுமின்றி, மூங்கில் தடியால் 40 அடிகள் கொடுக்க கட்டளை பிறப்பித்தார். தண்டனை நிறைவேற்றப்பட்டுக் கொண்டி ருக்கும் போது நீதிபதி ''நான் முன்பு ஒருநாள் உன் நிலையத் திற்கு வந்தபோது நீ என்னை தக்க மரியாதையுடன் நடத்தவில்லை'' என்றார். இதனைக் கேட்ட முடிதிருத்தும் கலைஞன்'' ஐயா, தாங்கள் என் எளிய நிலையத்திற்கு என்றுமே வந்ததில்லையே'' என்றான்.



உடனே நீதிபதி "ஆமாம் அப்படித்தான், நான் உன் நிலையத்திற்கு வருகை தந்ததே இல்லை" என ஒப்புக் கொண்டு, அவன் அதுவரை பெற்ற தண்டனைக்கு ஈடாக ஆயிரம் பணம் கொடுத்தனுப்பும்படி மறு ஆணை வழங்கினார்.

ஆனால் நீதிபதி குறிப்பிட்ட அந்த நிகழ்ச்சி அவனது நிலையத்தில் நடந்தது உண்மைதான். ஆனால் அப்போது அவனது நிலையம் வேறொரு மாநிலத்தில் இருந்தது.

## 93. கையெழுத்து

தெளிவாகக் கையெழுத்து எழுதத் தெரியாக ஒருவன் கையெழுத்து எழுதுவதில் மிகவும் ஆர்வமுள்ளவனாக இருந்தான். வருவோர் போவோரிடம் அவர்களின் உடமை களில் அவர்களின் பெயர் மற்றும் அழகிய தொடர்களை எழுதிக் கொடுக்க முனைவதுண்டு. இது அவ்வூரில் அனை வருக்கும் தெரிந்த ஒன்று. ஒருநாள் இந்தக் கையெழுத்து மேதை, எதிரே ஒரு மனிதன் விசிறியால் விசிறிக் கொண்டு தன்னைக் கடந்து செல்வதைக் கண்டு, தன் எழுதும் ஆசையை அடக்க முடியாதவனாக, அவரை அழைத்து அந்த விசிறியில் அவர் பெயரினை எழுதித் தருவதாகச் சொன் னான். உடனே அந்த மனிதன் கையெழுத்துக் கலைஞன் முன் மண்டியிட்டு வணங்கினான். இதனைக் கண்டு திகைப் புற்ற கையெழுத்துக் கலைஞன், இவ்வளவு மரியாதையும் பணிவும் எனக்குச் செலுத்த வேண்டா. நான் சில எழுத்து களை மட்டும் தான் உங்கள் விசிறியில் எழுதப் போகிறேன்" என்றான். அதற்கு அந்த மனிதன் மறுமொழியாக "நான் அதை நன்கு அறிவேன். நான் உங்களை வேண்டிக் கொள்வ தெல்லாம் தயவு செய்து அந்தப் பணியை நீங்கள் செய்ய

வேண்டா" என்றான் மிகப் பணிவோடு. அத்தனை அச்சம் அந்த மனிதனுக்கு அவனின் எழுத்தின் மீது.

## 94. குடிக்கத் துடிக்கும் மனம்

மது வெறி கொண்ட ஆசிரியர் ஒருவர் மற்றொரு வெறி மது விரும்பும் வெறியன் ஒருவனை வேலைக்கமர்த்தினான். அந்த மதுவெறியன் வைத்திருந்த மதுவினில் பெரும் பகுதியை வேலைக்காரனே குடித்துத் தீர்த்தான். எனவே அந்த ஆசிரியர் வேலைக்காரனையே அதன்பின் அமர்த்தவில்லை. அப்படியே ஒருவேளை வேலைக்கு அமர்த்தினாலும், மதுவைப் பற்றி சிறிதும் அறியாத சிறுவனையே அமர்த்த வேண்டும் என்று மனத்தில் தீர்மானித்துக் கொண்டார்.



ஒரு நாள் ஆசிரியரின் நண்பர் ஒருவர் ஒரு சிறுவனை அழைத்து வந்து அவனை வேலைக்காரனாக அமர்த்திக் கொள்ளும்படி பரிந்துரை செய்தார். ஆசிரியர் அச் சிறு வனிடம் மஞ்சள் நிறமான அரிசி மதுப்பாட்டிலைக் காட்டி, இது என்ன? என்று கேட்டார். சிறுவன் அம் மதுவின் பெயரைச் சரியாய் சொன்னான். மதுவின் பெயர்களை அறிந்து வைத்திருக்கும் இச் சிறுவன் அவற்றின் சுவைகளை யும் அறிந்திருப்பான் என்று எண்ணி அவனை வேலைக்கு அமர்த்திக் கொள்ள மறுத்தார். பின்னர் வேறு ஒரு சிறுவனை வேறு ஒரு நண்பர் வேலைக்குப் பரிந்துரைத்தார். அவனிடம் மிக உயர்வகை மதுவினைக் காட்டி அதன் பெயர் கேட்டார். அச் சிறுவனோ அதன் பெயரைத் தப்பாது செப்பினான். உறுதி, இவன் பெருங்குடிக்காரனாய் இருக்க வேண்டும் என நினைத்து அவனையும் புறக்கணித்தார்.

எதிர்பாராத வகையில் மூன்றாவது ஒரு சிறுவன் பரிந் துரைக்கப்பட்டான். இம்முறை இச் சிறுவன் வெள்ளை நிறமதுவிற்கும் மஞ்சள் நிற மதுவிற்கும் வேறுபாடு தெரி யாமல் திகைத்தான். அவன் மதுவினைப் பற்றி ஒன்றும் அறி யாதவன் எனக் கணித்து அவனை வேலைக்கு அமர்த்திக் கொண்டார்.

ஒருநாள் ஆசிரியர் வீட்டை வேலைக்காரனிடம் ஒப்ப டைத்து விட்டு வெளியில் சென்றார். அப்படி அவர் செல்லும்போது வேலைக்காரனிடம், "சமையல் அறையின் சுவரில் ஒரு பன்றியின் தொடை தொங்கிக் கொண்டிருக் கிறது. முற்றத்தில் கோழி மேய்ந்து கொண்டிருக்கிறது. எனக் காக அவற்றைப் பாதுகாத்துக் கொள். உள் அறையில் வெள்ளை மது நிரம்பிய குடுவை ஒன்றும், சிவப்பு மது நிறைந்த ஒரு குடுவையும் வைத்துள்ளேன். அவற்றைத் தொட்டுக்கூட பார்க்காதே. யாராவது அதனை அருந்தினால்

அவர்களின் வயிறும் குடலும் ஒரு மணி நேரத்தில் வெடித்துச் சிதறிவிடும்'' என்று மூன்று முறை வற்புறுத்திச் சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்று சென்றார்.

அவர் சென்றதும் முற்றத்தில் மேய்ந்து கொண்டிருந்த கோழியை அறுத்து சமைத்துச் சாப்பிட்டான். பின் பன்றியின் தொடையையும் தின்று தீர்த்தான். பின்னர் இரண்டு குடுவைகளிலும் இருந்த மதுவில் மூழ்கியெழுந்தான். போதை தலைக்கேறியது.


திரும்பி வந்த ஆசிரியர் சிறுவன் மரக்கட்டை போல் தரையில் கிடந்து உறங்குவதைக் கவனித்தார். அங்கு நிரம்பி வழிந்த மணத்திலிருந்து நிலமையை நன்கு புரிந்து கொண்ட ஆசிரியர் அவனைக் காலால் எட்டி உதைத்து எழுப் பினார் சினத்தில்.

கண்ணீரில் குழந்தை கதறியது, ''நீங்கள் சென்றதும் நான் வீட்டிலுள்ள அனைத்து உடமைகளுக்கும் பொறுப் பேற்றுக் கொண்டேன். எல்லாவற்றையும் நான் என் ஆதிக் கத்தில் அடக்கி ஒடுக்கிக் கட்டுப்படுத்தி வைத்திருந்தேன். திடீரென்று பூனை ஒன்று பதுங்கி வந்து பன்றித் தொடையைக் கவ்விச் சென்றது. அடுத்து நாய் ஒன்று ஓடி வந்து முற்றத்தில் நின்று மேய்ந்து கொண்டிருந்தக் கோழியைப் பக்கத்து வீட்டு முற்றத்திற்குத் துரத்தி விட்டது. இந்த முறைகேடுகளைக் கண்டு அதிர்ந்து போன நான், என் வாழ்க்கையை முடித்துக் கொள்ள நினைத்தேன். குடுவை களிலிருந்த மதுவைப் பற்றி நீங்கள் கூறிய எச்சரிக்கை மொழிகள் என் நினைவுக்கு வந்தன. எனவே சிவப்புக் குடுவைலிருந்த மதுவைக் காலி செய்தேன். ஆனால் நான் அதனைக் குடித்த பின்னும் உயிரோடிருப்பதை உணர்ந்தேன். எனவே நான் மஞ்சள் குடுவை மதுவையும்

குடித்தேன். பின்னர் நீங்கள் தற்போது கண்ட வண்ணம் வாழ்வுக்கும் சாவுக்குமிடையேயான் இப் பரிதாப நிலைக்குள்ளானேன்'' என்றான். கேட்டுக் கிறுகிறுத்தார் ஆசிரியப் பெருமகனார்.

## 95. ஒரு பறவை

புதுவையின் வட பகுதியில் ஒரு மனிதர் பறவை ஒன்றை வளர்த்து வந்தார். அந்தப் பறவை ஒரு நூறு வகைப் பறவைகளைப் போல் பாடும் திறமை கொண்ட சிறப்புப் பறவை என்று பெருமை பாராட்டி வந்தார். அதனைப் போற்றிப் பாதுகாக்க ஒரு சிறுவனை வேலைக்கு அமர்த்



தினார். அடிக்கடி அதனை வீதிக்கு எடுத்து வந்து மக்கள் பார்வைக்கு வைப்பார்.

ஒரு கோடை நாளில் அதனைக் குளிப்பாட்ட வேண்டியதாயிற்று. பறவையின் ஆண்டை வேலைக்காரச் சிறுவனிடம், "கவனமாக அதனை நீராட்டு; நீராட்டும் போது ஒரு தூவல் உதிர்ந்தாலும் அதற்கு ஈடாக நீ உன் கால்களை ஒன்றைத் தர வேண்டும். கவனம்; கவனம்" என்று எச்சரித்தார். அவ்வாறே பறவையைக் கவனத்தோடு நீராட்டிக் கொண்டிருந்தான் சிறுவன். அந்த வேளையில் வீட்டுக்கார அம்மா வேறொரு பணியைத் தனக்காகச் செய்ய ஆணையிட்டாள். சிறுவனோ "என்னால் பறவையை விட்டு ஒரு கணம் கூட விலக முடியாது, ஒரு தூவல் உதிர்ந்தாலும் நான் என் காலை இழந்து விடுவேன்" என்று மறுமொழி பகர்ந்தான்.

இந்த மொழிகளைக் கேட்டு வீட்டுக்காரி சினத்தில் கொதித்தாள். சீறிப் பாய்ந்தாள். பறவையின் தூவல்கள் அனைத்தையும் பிய்த்து எறிந்தாள்.

சற்று நேரத்தில் ஆண்டை வந்தான். பறவையின் அலங்கோலத்தைக் கண்டு ஆத்திரம் மேலிட "என் இனிய பறவையின் இறகுகளைப் பிய்த்தெறிந்தது யார்?" என்று ஆவேசத்தோடு கேட்டான்.

சிறுவன் அஞ்சி வாயடைத்து நின்றான். வீட்டுக்காரி உறுமினாள் "நான் தான்" என்றாள். ஆண்டை மெல்லிய குரலில் "பிடுங்குதல் சற்றுக் கடினமான வேலைதான். தூவலில்லாதது பறவைக்குக் குளிர்ச்சியாக இருக்கும் நல்லது, நல்லது. நீராட்டுவதினும் இது சிறந்தது தான்" என்று பக்க வாத்தியம் இசைத்தான் ஆண்டை.

## 96. மனித உடையில் குரங்கு

அரசு அதிகாரி ஒருவர் தமது சட்ட உதவியாளரை அனுப்பி 'மனித உருவில் இருக்கும் மனிதனல்லாத' ஒருவனை அழைத்து வரும்படி ஆணையிட்டார். இந்த வண்ணனை உதவியாளருக்குப் புரியாத புதிராக இருந்தது. குழம்பினான். தன் மனைவியிடம் அது பற்றிக் கலந்தெண்ணினான். அவனின் மனைவியோ மிகவும் புறக்கணிப்பாக "இந்த ஆணையை நிறைவேற்றுவது கடினமானது அல்ல; மிகவும் எளிது" என்றாள். "ஒரு குரங்கிற்கு மனிதனின் தொப்பியையும், உடையையும் அணிவித்துப் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லுங்கள். உங்கள் பணி முடிந்துவிடும்" என்றாள்.

மனைவியின் ஆய்வுரைப்படி செய்தான் ஊழியன். அதிகாரி மகிழ்ந்தான். குரங்கிற்குப் பழங்கள் தந்தான்.



அதனை அன்போடு நடத்தினான். பின்னர் தன்னோடு குடிப்பு அருந்த அந்தக் குரங்கினை அழைத்து வரும்படி அருகிலிருந்தவர்களிடம் ஆணையிட்டான். பின் ஒருமுறை மது அருந்தியதும் குரங்கு தன் கவிப்பினையும் உடையினையும் அகற்றி எறிந்துவிட்டுக், கத்திக் கொண்டு அங்குமிங்கும் குதித்துத் தாவி விருந்து மண்டபத்தில் பேரிரைச்சலையும் பரபரப்பையும் உண்டு பண்ணியது.

அதிகாரி சொன்னான் "ஓ விலங்கே, உனக்கு இங்கிதம் தெரியவில்லை. மது அருந்தும் முன் நீ மனிதனாக இருந்தாய். குடித்தபின் நீ மனித இயல்பை மட்டுமில்லை தோற்றத்தையே இழந்தாய்" என்று.

## 97. கீழ்மை உணர்வுள்ள அரசு அதிகாரி

கஞ்சத்தனமிக்க அரசு அதிகாரி ஒருவர் பணியின் பொருட்டு ஒரு குறிப்பிட்ட அமைச்சகததிற்குத் தலைநகரிலிருந்து அனுப்பப்பட்டான். அந்த அமைச்சகத்திற்குள் நுழையும் முன் தன்னைப் போலவே பசியோடிருந்த தன் ஏவலன் முன்னிலையில் ஒரு கோப்பை கம்பங் கூழ் அருந்தினான். பின் அந்த ஏவலன் தானும் ஒரு குடுவைக் கூழ் சாப்பிட எண்ணி, மற்றவர்கள் முன்னிலையில் அதற்காகத் தன் ஆண்டையிடம் பணம் கேட்டால் மறுக்கமாட்டான் என எண்ணிப் பணம் கேட்டான். அதிகாரியும் அவ்வாறே வேண்டா வெறுப்பாகப் பணம் கொடுத்தான்.

பின் அமைச்சகத்தில் தன் பணியினை முடித்துக் கொண்டு, வீடு திரும்ப வண்டியேறினான். ஏவலன் வண்டியின் முன்னிருந்து குதிரையை ஓட்டினான். வண்டி புறப்பட்டதும் அந்த அதிகாரி ஏவலனிடம் "மரியாதை தெரி

யாத மடையனே, நீ என்ன என்னிலும் மூப்பா? முன்னிருந்து குதிரையோட்டுகிறாய்?'' என்று கேட்டான். உடனே ஏவலன் அதிகாரியின் பக்கவாட்டில் அமர்ந்து குதிரையை ஓட்டினான். மீண்டும் அந்த அதிகாரி "நீ என்ன எனக்குச் சம நிலையில் உள்ளவனா? அருகில் அமர்ந்து குதிரையை ஓட்டுகிறாய்?'' என்றான். பின் அந்த ஏவலன், வண்டியின் பின்புறம் அமர்ந்தவாறு குதிரையினை ஓட்டினான். மீண்டும் சினமுற்ற அந்த அதிகாரி "குதிரை ஓடும் போது எழும் தூசுக ளெல்லாம் நேரிடையாக என் மீது வந்து படுகின்றனவே என்றான். வேறு வகையறியாத அந்த ஏவலன் வண்டியை விட்டுக் கீழிறங்கி "ஐயா, எப்படி நான் வண்டியினை ஓட்டுதல் வேண்டும் என்று கட்டளையிட்டால், அவ் வண்ணமே செய்கிறேன்'' என்று பணிவுடன் கூறினான்.

அதனைக் கேட்ட அதிகாரி "நீ எங்கிருந்து ஓட்டி னாலும் எனக்கு அக்கறையில்லை. நீ குடித்த கம்பங் கூழிற்கு நான் கொடுத்த பணத்தை இப்போதே திரும்பத் தந்து விட்டால், நீ எப்படி எங்கிருந்து குதிரையை ஓட்டினாலும் எனக்கு ஏற்புடையதே'' என்றார்.

## 98. யாரும் முட்டாள் இல்லை

பொறுமைமிக்க மனிதன் ஒருவன் ஒருநாள் ஓர் இணை காலணிகளை வாங்கினான். எதிரில் அவ் வழியாய் வந்த முன்கோபி ஒருவன் "எவ்வளவு பணம் இதனை வாங்கத் தந்தாய்?'' என்று கேட்டான். எதிலும் எளிதாகவும் அமைதியாகவும் செயல்படும் முதல் மனிதன் மெதுவாக ஒரு காலணியினை உயர்த்திக் காண்பித்து '25 பணம் ஆனது' என்றான். அவன் சொல்லி முடிக்கும் முன் ஆத்திரக்காரன்

"முட்டாளே காலணிகளுக்கா 25 பணம் தந்தாய்?" என்று கோபித்துக் கொண்டான்.

முதல் மனிதன பொறுமையிழக்காமல் "நீங்கள் மறுப் பீர்களானால், அவர்களையே போய் கேட்கலாம்; வாருங்கள், ஆனால் ஆத்திரப்படாமல் சற்று அமைதிகாத்துக் கொள்ளுங்கள். இப்போது சினந்து கொண்டது போல் சினந்துக் கொள்ளாதீர்கள்" எனறான. அவன மேலும் மற்றொரு காலணியைத் தற்போது உயாததிக் காண்பித்து "இந்தக் காலணியும் அந்த விலையில் அடக்கம் தான்" எனறான்.

## 99. ஆவி கேட்டப் பணம்

நடை பயணி ஒருவா தம் உடைமைகளையெல்லாம் கட்டிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருநதாா. சாத்தூர் வழியாக வந்தபோது, அங்கு வறுமை தாண்டவமாடியதும் பலபோ படடினியால் மடிநதனா. தொடர்ந்து ஏற்பட்ட அழி வுகளினால் சத்திரங்கள் பல மூட டடிருந்தன. வழிப்போக் கர்கள் கோயில்களில் தங்கி வந்தனா. அப்படி ஒரு கோயிலில் தங்கும்போது பல கல்லறைகள் அச சத்திரததின கீழ்ப் பகுதியிலும், ஒரே ஒரு கல்லறை மட்டும் மேற்குப் பகு தியிலும் இருபபதைக் அந்த வழிப்போக்கன் கவனித்தான். நன்றாக இருண்டிருந்த மூன்றாம் சாமத்தில் ஒவ்வொரு கல்லறையிலிருந்தும் மெலிந்த கைகள் வெளியே நீட்டிக் கொண்டிருந்தன. மேற்குப் பகுதியிலிருந்த கல்லறையிலி ருந்தும் ஒரு கை வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. ஆனால் அந்தக் கை மட்டும் சதைப்பிடிப்புள்ள கையாகத தோன்றி யது. நிலமையைப் புரிந்து கொண்ட வழிப் போக்கன்

துணிவை வரவழைத்துக் கொண்டு, புன்னகை பூத்த வண்ணம் அவற்றைப் "பத்திமிக்கவர்களே, உங்கள் மெலிந்த கைகளிலிருந்து நீங்கள் எப்படிபட்ட ஏமாற்றத் தையும் வேதனையையும் இங்கு நுகர்ந்தீர்கள் என்பதை உணர்ந்து கொண்டேன். அந்த உலகிலும் உங்கள் வேதனை களைக் குறைக்க பணம் வேண்டுகின்றீர்களா?" என்று கேட்டு வரவேற்றான். பின்னர் ஒவ்வொரு கைகளிலும் ஒரு நாணயத்தை வைத்தான். கீழ்ப் பகுதியிலுள்ள கல்லறையில் காணபபட்ட கைகள் மீண்டும் கல்லறைக்குள் இழுத்துக் கொளளபபட்டன. ஆனால் மேற்குப் பகுதியில் தனித்திருந்த அந்தக் கல்லறையில் நீட்டிக் கொண்டிருந்த கை மட்டும் வெளியிலேயே நீட்டிக் கொண்டிருப்பதைக் கவனித்தான் அந்த வழிப்போக்கன. பின்னர் அவன் "இந்த ஒரு நாணயம் உனக்குப் போதாதென்றால் மேலும் தருகிறேன் என்று சொல்லி அந்தக் கையில் நூறு நாணயங்களுக்கு மேலாகக்



கொட்டினான். இருப்பினும் அது மறையவில்லை. கோப முற்ற வழிப்போக்கன் "நீ அதிகம் கேட்கிறாய்; மிக அதிகம் கேட்கிறாய்'' என்றவாறு தான் வைத்திருந்த நாணயங்கள் அனைத்தையும் வைத்தான். உடனே கை உள்ளே இழுத்துக் கொள்ளப்பட்டது.

வழிப்போக்கன் வியப்புற்றான். வியப்பு மேலிட விளக் கொன்றை ஏந்திய வண்ணம் ஒவ்வொரு கல்லறையிலும் எழுதப்பட்டிருந்த வாசகங்களை படித்துப் பார்த்தான். கீழ்ப் பகுதியில் காணப்பட்ட கல்லறைகளில் புதைக்கப்பட்ட வாகள் அனைவரும் வறுமையால் மடிந்தவர்கள் என்று அறிந்தான். மேற்குப் பகுதி கல்லறையில் "மதிப்பிற்குரிய திரு....... அவர்கள், மாவட்ட காவல்துறை அதிகாரி. ........ மாநிலம் என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டு, வியப்பு நீங்கவும், விளக்கம் பெற்றான் அந்த வழிப்போக்கன.

## 100. குடிகாரன் சூளுரை

ஓயாத குடியன் ஒருவன் இருந்தான். "உன் உடல் நலத்தைக் காக்கவாவது நீ குடிக்காமல் இருக்க வேண்டும்'' என்று அவன் நண்பர்கள் அவனைக் கேட்டுக் கொள்கின்ற பரிதாப நிலை ஏற்படும் வரை நீ குடித்துக் கொண்டே யிருந்தான். குடிகாரன தன் நண்பர்களிடம் "நானும் குடியை முழுமையாக விடடு விடததான் நினைக்கிறேன். ஆனால் என் மகனின் பிரிவு என்னை மிகவும் வாடடுகிறது. அவனது பிரிவாற்றாமையை மறக்கத்தான் குடிக்கிறேன. அவன் மட்டும் என்னிடம் திரும்பி வந்துவிட்டால் குடியை நிறுத்தி விடுவேன்'' என்றான்.

இதனைக் கேட்ட அவனது நண்பாகள் "அப்படி யானால் இப்போது நீ சொல்லியபடி வாக்குத் தவறாது

கொட்டினான். இருப்பினும் அது மறையவில்லை. கோப முற்ற வழிப்போக்கன் "நீ அதிகம் கேட்கிறாய்; மிக அதிகம் கேட்கிறாய்" என்றவாறு தான் வைத்திருந்த நாணயங்கள் அனைத்தையும் வைத்தான். உடனே கை உள்ளே இழுத்துக் கொள்ளப்பட்டது.

வழிப்போக்கன் வியப்புற்றான். வியப்பு மேலிட விளக் கொன்றை ஏந்திய வண்ணம் ஒவ்வொரு கல்லறையிலும் எழுதப்பட்டிருந்த வாசகங்களை படித்துப் பார்த்தான். கீழ்ப் பகுதியில் காணப்பட்ட கல்லறைகளில் புதைக்கப்பட்ட வர்கள் அனைவரும் வறுமையால் மடிந்தவர்கள் என்று அறிந்தான். மேற்குப் பகுதி கல்லறையில் "மதிப்பிற்குரிய திரு....... அவர்கள், மாவட்ட காவல்துறை அதிகாரி. ........ மாநிலம் என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டு, வியப்பு நீங்கவும், விளக்கம் பெற்றான் அந்த வழிப்போக்கன்.

## 100. குடிகாரன் சூளுரை

ஓயாத குடியன் ஒருவன் இருந்தான். "உன் உடல் நலத்தைக் காக்கவாவது நீ குடிக்காமல் இருக்க வேண்டும்" என்று அவன் நண்பர்கள் அவனைக் கேட்டுக் கொள்கின்ற பரிதாப நிலை ஏற்படும் வரை நீ குடித்துக் கொண்டே யிருந்தான். குடிகாரன் தன் நண்பர்களிடம் "நானும் குடியை முழுமையாக விட்டு விடத்தான் நினைக்கிறேன். ஆனால் என் மகனின் பிரிவு என்னை மிகவும் வாட்டுகிறது. அவனது பிரிவாற்றாமையை மறக்கத்தான் குடிக்கிறேன். அவன் மட்டும் என்னிடம் திரும்பி வந்துவிட்டால் குடியை நிறுத்தி விடுவேன்" என்றான்.

இதனைக் கேட்ட அவனது நண்பர்கள் "அப்படி யானால் இப்போது நீ சொல்லியபடி வாக்குத் தவறாது

நடப்பேன் என்று உறுதி செய்து கொடு'' என்றனர். அவனும், என் மகன் திரும்பி வந்தபின்னும் நான் குடியை நிறுத்தாமல் இருந்தால் மதுபானச் சால்களின் கீழ் அகப்பட்டு நசுங்கியோ, மதுக்கிண்ணம் தொண்டையில் சிக்கி மூச்சுத் திணறியோ, மதுக் குளத்தில் வீழ்ந்து மூழ்கியோ மடிவேனாக' என்று சூளுரை செய்தான். நிறைவு அடைந்த நண்பர்கள் "உன் மகன் இப்போது எங்கே இருக்கிறான்?'' என்று வினவியதும் அவன் சொன்னான் "அவன் தற்போது "அண்ணல் காந்தி நகர்'' என்னுமிடத்தில் எனக்காக மது வாங்கச் சென்றிருக் கிறான்'' என்று.

## 101. நீதியின் கண்களில் நியாயமே

வழக்கொன்றில் வாக்கு மூலங்களைக் கேட்பதற்காக, வழக்காளியையும், எதிர் வழக்காளியையும் மன்றத்திற்கு அழைத்து வருமாறு தன் ஏவலனுக்கு ஆணையிட்டார். கையூட்டு வாங்குவதில் கொஞ்சமும் அஞ்சாத அரசு அதி காரியொருவர், மனுதாரர் 500 பணத்தை அதிகாரிக்கு அளித்தார். மாற்றுக் கட்சிக்காரரும் இதனைக் கேள்விப்பட்டு அதைப்போல் இருமடங்கு பணத்தை அதே அதிகாரிக்குத் தந்தார்.

ஆய்வுரைத் தீர்ப்பின் போது அதிகாரி வழக்குத் தொடுத்தவருக்குச் சவுக்கடி தண்டனை வழங்கினார். இரக்கத்துக்குரிய வழக்குத்தொடுத்தவரோ தான் 500 பணம் தந்ததைக் கைசெய்கையால் சுட்டிக்காட்டி, "என் வழக்கில் நேர்மையிருக்கிறது நடுவரே'' என்றான். அதிகாரியோ பதி லுக்கு எதிராளி இருமடங்கு கையூட்டுத் தந்ததைச் (சமிக்ஞை) கைசெய்கை மூலம் சுட்டிக்காட்டி, "எதிரொ ளியின் கூற்றிலும் இரு மடங்கு நேர்மை உள்ளதே'' என்றார்.

## 102. பணம் பெறுதல்

இரண்டு தங்கக் கட்டிகள் அனுப்பும்படி நகைக்கடை ஒன்றுக்குக் குறிப்பாணை ஒன்றினை அனுப்பினார் அரசு அதிகாரி ஒருவர். குறிப்பாணை பெற்றதும் தங்கக் கட்டி களை அதிகாரியிடம் கொடுத்து விலைதனைப் பெற்று வர நகை வணிகர் புறப்பட்டார். அதிகாரியைக் கண்டு தங்கக் கட்டிகளை அவரிடம் கொடுத்தார். இரண்டு கட்டிகளையும் பெற்றுக் கொண்ட அதிகாரி தங்கக் கட்டிகளின் விலை யினைக் கேட்டார். விலையினைக் கூறியபின், நகைவணிகர் தங்களுக்காக 50% தள்ளுபடி செய்து தருகிறோம்" என்றார். உடனே அதிகாரி இரண்டில் ஒரு கட்டியினை அவனிடம் கொடுத்துவிட்டு, மற்றொன்றை எடுத்துக் கொண்டார். பணத்தைப் பெற நகை வணிகர் நின்றார். "ஏன்? நிற்கிறாய். நான் எடுத்துக் கொண்ட ஒரு தங்கக் கட்டிக்குத்தான் அப்போதே பணம் தந்து விட்டேனே" என்றார் அதிகாரி. "என்ன?" அதிர்ந்தான் நகை வணிகர். சினம் கொண்டார் அதிகாரி "நீ தானே சொன்னாய் உங்களுக்காக விலையில் 50% விழுக்காடு தள்ளுபடி செய்து தருகிறோம் என்று. நான் எடுத்துக் கொண்ட ஒரு தங்கக்கட்டிக்கு விலையாக மற்றொரு கட்டியைத்தான் திரும்பத் தந்து விட்டேனே. இன்னும் இங்கு ஏன் நிற்கிறாய். தாமதியாதே ஓடு ஓடு" என்று விரட்டினார் அதிகாரி, நகை வணிகரை.

## 103. ஓர் உண்மையான ஆசை

மனிதர்களின் உருவப்படங்களை வரையும் ஓவியர் ஒருவருக்கு அவர் தொழில் மிகவும் மந்த நிலையில்

இருந்தது. தொழிலை முன்னேற்ற திருமண இணைகளின் படம் ஒன்றை வரைந்து அதைக் கடையில் மக்கள் பார்வைக்கு வைத்தால், புதிதாகத் திருமணமான இணையர் களைக் கவரலாம் என்று ஒருவர் ஆய்வுரை சொன்னார். அவர் ஆய்வுரையின் படி ஓவியர் தம் திருமணப்படத்தையே மிகவும் பெரிதாக வரைந்து தமது நிலையத்தில் மக்கள் பார்வைக்கு வைத்தார்.

ஒருநாள் ஓவியரின் நிலையத்திற்கு அவருடைய மாமனார் வந்தார். பலகணியில் வைக்கப்பட்டிருந்த மணஇணையரின் உருவப்படத்தை நீண்ட நேரம் உற்று உற்றுப் பார்த்தார். படத்தில் இருப்பது யாரென்று தெரியாமல் போகவே, ‘யார்? இந்தப் பெண்?’ என்று மருமகனிடம் கேட்டார். மருமகன் “உங்கள் மகள் தான்’ என்றார். மேலும் சற்று நேரம் பார்த்தப்பின், “அது என் மகளானால் நீங்கள் ஏன் வேறு ஒருவரை மணம் செய்து கொண்டிருப்பது போல் வரைந்துள்ளீர்கள்? என்று வியந்து கேட்டார்.

## 104. உருவப்படத்தில் அடையாளம் காணுதல்

ஓர் உருவப்படம் வரைந்து முடியும் தருவாயில், படத்தை வேறு ஒருவரிடம் காட்டி அவ் உருவத்தின் சாயலைத் தீர்மானிக்கச் சொன்னார் ஓவியர். தலை கவிப்பினை வைத்து அது நீங்கள் தான் என்று அடையாளம் காண்கிறேன் என்று ஓர் ஆள் தெரிவித்தார். இரண்டாவது ஆள் உங்கள் மேலாடையை வைத்து உங்களை அடை யாளம் கண்டு கொள்கிறேன் என்றார். மூன்றாவது ஆளை ஓவியர் முன்னதாகவே அணுகி ஏற்கனவே என் கவிப்பின்

மூலமாகவும், மேலாடையின் மூலமாகவும் வேறு இருவர் என் சாயலை அடையாளம் கண்டதாகச் சொல்லி விட்டனர். நீங்கள் என்முகச் சாயலை வைத்து நான்தான் அது என்று கண்டு கொண்டேன் என்று சொல்லுங்கள் என்று வேண்டிக் கொண்டார். சற்று நேரம் உருவப்படத்தை உற்றுப் பார்த்தப் பின் மூன்றாவது ஆள் "உங்கள் தாடியின் மூலம் அது நீங்கள் தான் என்று அடையாளம் காண்கிறேன்" என்றார்.

## 105. மென்மையான மண்டை

முடிதிருத்தும் நிலையம் ஒன்றில் பயிற்சியாளன் கத்தி யினை முறையாகப் பயன்படுத்தத் தெரியாமல் முடிவெட்ட வந்தவனின் மண்டையில் பல வெட்டுக் காயங்களை ஏற்ப டுத்தினான். இதனால் சலிப்படைந்த அந்த முடிவெட்டும் பயிற்சியாளன் தன் முதலாளியிடம் "இவருடைய மண்டை மிகவும் மென்மையாக இருக்கிறது. இவருடைய மண்டை முற்றிலும் வளர்ச்சி அடையும் வரை காத்திருந்துதான் முடி வெட்ட முடியும்" என்று சென்னான்.

## 106. மயிரை மழித்த பின்

தாடி நரைத்த போது அதிலுள்ள வெள்ளை முடிகளை பிடுங்குமாறு தன் வைப்பாட்டியிடம் சொன்னான் ஒரு முதியவன். வெள்ளை முடியே அதிக அளவில் இருந்ததால் அவள் தாடியிலுள்ள ஒரு சில கறுப்பு மயிர்களைப் பிடுங் கினாள் வயோதிகன் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்த போது கொதித்தான். தன் ஆசைக் கிழத்தியை வசை மாறிப் பொழிந்தான். அவளோ "நீங்கள் பெரும்பான்மையைப் புறக்

கணித்துச் சிறுபான்மையை வைத்துக் கொள்வீர்கள் என்று நான் எப்படி அறிவேன்?" என்றாள்.

## 107. காக்கி நிறத் தாடி

செந்நிறத் தாடி வைத்திருந்த ஒரு மனிதன் தன் மனைவியிடம், "இப்படிப்பட்ட வெளிறிய வண்ணத்தில் தாடி வைத்திருப்பவர்கள் மிகவும் அரிது. அதுமட்டுமல்லாது மெல்லிய வண்ணத் தாடியுடையவர்கள் எப்படிப்பட்ட முரடர்களையும் சண்டையில் வெற்றியடைய முடியும்" என்று பெருமைபட்டுக் கொண்டான்.

ஒருநாள் வெளியில் சென்ற அவன் சற்று நேரத்தில் வீங்கிப்போன முகத்துடன் வீடு திரும்பினான். அவனது மனைவி அவன் முன்பு வீரம் பேசியதை சுட்டிக்காட்டிக் கேலி செய்தாள். அதற்கு அவன் "நான் ஒரு சிவப்புத் தாடியுள்ள மனிதனை எதிர்த்து சண்டையிடுவேன் என்று முன்பே எனக்கு எப்படித் தெரியும். இன்று அப்படிபட்ட சிகப்புத் தாடியுள்ள மனிதனோடு சண்டையிட வேண்டியதாயிற்று" என்றான்.

குறிப்பு: சீன நாட்டில் கருப்பு நிறத்தாடி உடையவர்களே அதிகம். ஒரு சிலரே வெளிர் நிறத்திலும், சிகப்பு நிறத்திலும் தாடி வைத்திருந்தனர்.

## 108. தரையில் சிக்கிய குள்ளன்

குள்ளன் ஒருவன் படகில் பயணம் செய்து கொண்டிருந்தான். திடீரென்று படகு ஆழம் குறைவான இடத்தில் தரையில் தட்டி சிக்கிக் கொண்டது. குள்ளன் தரையில்

சிக்கிய(புதைந்த) படகை மீட்கப் பெரும்பாடுபட்டு விட்டான். படகு அவன் தலையின் மீது புறண்டு விழுந்தது. அதிர்ந்து போன குள்ளன், "ஆழம் குறைவாக இருந்ததால் படகு தரையில் சிக்கிக் கொண்டது. ஆழம் அதிகமானதால் நான் சிக்கிக் கொண்டேன்" என்று கத்தினான்.

## 109. சோயாவிலிருந்து இறைச்சி

சோயாபிண்ணாக்கிலிருந்து இறைச்சி(கறி) செய்து உண்மை இறைச்சியென விற்று வந்தான் ஒருவன். அவன் இந்த கமுக்கத்தை யாரிடமும் கூறிவிடாதே என்று தன் வாணிப நுட்பத்தை மகனிடம் சொல்லி எச்சரித்து வந்தான். சில நாள்களுக்குப் பின் வாடிக்கையாளர் ஒருவர் இறைச்சி வாங்க வந்தார். "இது சோயாவில் உண்டாக்கியதன்று" என்று தானாகவே வாடிக்கையாளரிடம் கூறினான் மகன். இதைக் கேட்டதும் வாடிக்கையாளருக்குச் ஐயமேற்பட்டது. இறைச்சி வாங்காமலே அவர் அவ்விடம் விட்டு அகன்றார். இதை அறிந்த புலால் கடைக்காரன் தன் மகனை



உதைத்தான். "நான் ஏற்கனவே இதுபற்றி எதுவும் சொல்லக் கூடாது" என்று உனக்குச் சொல்லியிருக்கிறேன்" பின் ஏன் இவ்வாறு சொன்னாய் என்று மீண்டும் அடித்தார். சற்று நேரத்துக்குப் பின் வேறு ஒரு வாடிக்கைக்காரர் வந்து இறைச்சியை எடுத்து ஆய்ந்து பார்த்தார். பின்னர் அவர் கேட்டார் "தோல் மிகவும் தடிப்பாக உள்ளதே. இது சோயாவிலிருந்து உண்டாக்கப்பட்டது தானே" என்றார். கடைக்காரரின் மகன் உடனே, "நான் ஒன்றும் அதுபற்றிச் சொல்லமாட்டேன். ஏன் அது பற்றி என்னிடம் கேட்கிறீர்கள்? 'ஊகூம், நான் சொல்ல மாட்டேன்" என்றான்.

## 110. குறைப் பிறப்பு

பெண்ணொருத்திக்கு ஏழு மாதத்தில் குழந்தையொன்று பிறந்தது. குறைப் பிறப்பானதால் எங்கே குழந்தை இறந்து விடுமோ என்ற அச்சத்தில் பலரிடம் அது பற்றி உரையாடினான் அப் பெண்ணின் கணவன். ஒருநாள் நண்பர் ஒருவரிடம் இதுபற்றிக் கூறினான். "என் தாத்தா கூட உன் மகனைப் போல ஏழு மாதத்தில் பிறந்தவர்தான், எனவே அஞ்சத் தேவையில்லை" என்றார் அந்த நண்பர். உடனே இந்த மனிதன் "உன் தாத்தா வாலிபப் பருவம் வரை வாழ்ந்தாரா அல்லது ... என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்" என்றார்.

## 111. கிளைகளைத் தேடி ஒருவன்

'ப' வடிவத்தில் வளருகின்ற மரக்கிளைகளை வெட்டி முக்காலிக்குக் கால்களாகப் பயன்படுத்தி வந்தனர் சிற்றூர் வாசிகள். அப்படி ஒருவர் வீட்டின் முக்காலியின் கால்

உடைந்த போது, பொருத்தமான கிளை ஒன்றை வெட்டி வரும்படி வேலைக்காரனை மலைக்கு அனுப்பினார் ஒருவர். நாள் முழுவதும் சுற்றித் திரிந்து விட்டு வெறுங்கையோடு வீடு திரும்பினான் வேலைக்காரன். "ஏன்" என்று வீட்டுக்காரன் கேட்டபோது அவன், "ப" வடிவ கிளைகள் ஏராளமாய் உள்ளன. ஆனால் அவை மேல்நோக்கி வளராமல், கீழ் நோக்கி 'ப' வளர்ந்துள்ளன" என்றான்.

## 112. வாத்திருந்த இடத்தில்...

'வாத்து' இருந்த இடத்தில் 'தாராக்கோழி' ஒன்றினை விற்கச் சந்தைக்கு எடுத்துச் சென்றான் ஒருவன். சந்தையை அடைந்ததும் சீறுநீர் கழிக்க வாத்தினை வெளியே வைத்து விட்டுப் பொதுக்கழிப்பிடம் ஒன்றினுள் நுழைந்தான். கழிப் பிடத்தில் அவன் இருக்கும் போது வாத்தைத் திருடிக் கொண்டு அந்த இடத்தில் ஒரு தாராக் கோழியை விட்டுச் சென்றான் வேறொருவன்.

கழிப்பிடத்தை விட்டு வெளியே வந்த வாத்துக்கு உரிமைக்காரன் அந்த இடத்திலிருந்த தராக் கோழியைக் கையில் மீண்டும் எடுத்துக் கொண்டு "என்ன வியப்பு, நான் உள்ளே சென்று சிறுநீர் கழித்துவிட்டு வருமுன் வாத்தின் கனம் எடை குறைந்துவிட்டதே. பசியால் தான் கனம் குறைந்துவிட்டதோ!" என்று சொல்லிக் கொண்டே சென்றான்.

## 113. மூதாட்டி ஒருத்தி

வயதான பேரிளம் பெண்ணொருத்தியை மண முடித்துக் கொண்டார் ஒரு முதியவர். முதலிரவில்தான், தன்

மனைவியின் முகத்தில் ஏராளமான சுருக்கங்கள் இருப்பதைக் கண்டார். சுருக்கங்களைக் கண்டு கவலைப்பட்ட அவர் "உன் உண்மையான வயதுதான் என்ன?" என்று மனைவியிடம் கேட்டார். "நாற்பது" இருக்கும் என்றாள். "ஆனால் திருமணச் சான்றிதழில் குறிப்பிடும் போது முப்பத்தெட்டு என்று சொன்னாயே" சினந்து கொண்டான் கணவன். "என் கணக்குப்படி உனக்கு 45 வயது இருக்கும். ஏன் பொய் சொன்னாய்" என்றான் கணவன். "தொடர்ந்து உண்மையைச் சொல்வதானால், எனக்கு 54 வயது ஆகிறது" என்று சொல்லி மேலும் அதிர வைத்தாள் அந்த ஆரணங்கு. மேலும் மேலும் உன் உண்மையான வயதைச் சொல் என்று கேட்டபோது அவள் 54, என்று மீண்டும் மீண்டும் அதையே சொல்லி வந்தாள்.

பின்னர் அவர்கள் படுக்கையில் படுத்ததும் அவள் உண்மை வயதைத் தெரிந்து கொள்ள வகைதேடி சிந்தித்த வண்ணமிருந்தான் கணவன். திடீரென்று படுக்கையை விட்டு எழுந்து "கொஞ்சம் பொறு. உப்புப் பானையை மூடி வைத்தேனா? இல்லையா? என்று பார்த்து வருகிறேன், திறந்திருந்தால் எலி தின்றுவிடும்" என்றான் அவன். பட்டென்று அவள் சொன்னாள்" என்னுடைய 68 ஆண்டுகால வாழ்வில், ஒருபோது கூட எலி உப்பைத் தின்னும் என்று சொல்லக் கேள்விப்பட்டதில்லை" என்று.

## 114. தேநீர் கேட்டு ஒருவன்

வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்தார். கணவன் மனைவியிடம் தேநீர் படைத்துக் கொண்டு வரச் சொன்னான். "இதுவரை நீங்கள் தேயிலையே வாங்கித் தந்ததில்லை எப்படி தேநீர் உண்டாக்க முடியும்" என்றாள்

மனைவி. "சரி கொஞ்சம் தண்ணீரைக் கொதிக்க வைத்தாவது கொடு" என்றான் கணவன். "விறகு வாங்கிப் போட்டதே இல்லை. தண்ணீரை எப்படிக் கொதிக்க வைக்க முடியும்?" எதிர் கேள்வி கேட்டாள் மனைவி. சினத்தில் கொதித்தான். கொச்சைச் சொற்களைக் கொப்பளித்தான் மனைவி மீது. "தலையணைகளில் வைக்கோல் துரும்பு கூடவா இல்லை" மனைவியிடம் சீறினான். அதுவரை பொறுத்த அவளும் பொங்கினாள். பொன்மொழிகளை அவன் மீது உதிர்த்தாள். பின்னர் சொன்னாள் செங்கற்களை தலையணையாகப் பயன்படுத்தும் நமது வீட்டில் வைக்கோற் துரும்பேது?" என்றாள் அந்தத் தக்க விடை தந்த தகைசால் பத்தினி.

## 115. நாளை சற்று முன்னதாகவே வா

கடன் கொடுத்த அனைவரும் கடன் வாங்கியவன் வீட்டில் ஒட்டு மொத்தமாய்க் குழுமி அங்கிருந்த முக்காலி களில் அமர்ந்தனர். ஒருவன் வீட்டினுள் உட்கார இடமின்றி முற்றத்து மொட்டை மாடியில் ஏறி நின்றான். முற்றத்து மொட்டை மாடியில் உட்கார இடமன்றி நின்று கொண்டிருந் தவனிடம் கடன்பட்டவன் சொன்னான் "நாளைக்குச் சற்று முன்னதாகவே வந்து விடு என்று சைகை செய்து காட்டினான். முற்றத்து மொட்டைமாடியில் நின்றவன், மற்ற வர்களிடமிருந்து தன்னைப் பிரித்து நாளை நம் கடனைத் திரும்ப தருவதற்குத் தான் முன்னதாகவே வரச் சொல்லு கிறான் என்று எண்ணி மகிழ்ந்தான். வெளியேறிய அவன் தன்னைப் போல் கடன் கொடுத்த மற்றவர்களிடம் "இன்று இரவு மட்டும் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டுச் சென்றான். எல்லோரும் கலைந்து சென்றனர்.

மறுநாள் காலை அவன் மட்டும் கடன் வாங்கியவன் வீட்டிற்கு முன்னதாகவே வந்து, தன் கடன் திரும்பக் கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது, கடன் வாங்கியவன் சொன்னான்: "நீங்கள் நேற்று வீட்டினுள் உட்கார இடமில்லாமல் முற்றத்து மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்ததைக் குறித்து மிகவும் வேதனைப்பட்டேன், அதனால்தான் இன்று முன்கூட்டியே வந்து இடம் பிடித்துக் கொள்ளவே உங்களை முன்னதாக வரும்படி அழைத்தேன் என்றான். அதிர்ந்தான் கேட்டவன்.

## 116. கனவும் நினைவும்

கடன் வாங்கிய ஒருவன் கடன் கொடுத்தவனிடம், "நான் இந்த உலகில் நீண்ட நாள் வாழமாட்டேன் என்று எண்ணுகிறேன். ஏனெனில் நேற்று இரவு நான் இறந்து போவது போல் கனவு கண்டேன்" என்றான். இதனைக் கேட்டுக் கடன் கொடுத்தவன், "அப்படியெல்லாம் நடக்காது. கனவுலகில் காண்பதற்கு நேர்மாறாகத் தான் நினைவுலகில் நடக்கும்" என்று மறுமொழி பகர்ந்தான்.

மீண்டும் ஒருநாள் இருவரும் சந்தித்தபோது கடன் கொடுத்தவனிடம் கடன் வாங்கியவன் சொன்னான். "நேற்றிரவு கண்ட கனவில் உங்கள் கடனையெல்லாம் நான் திரும்பத் தந்து விட்டேன்" என்றான். கடன் கொடுத்தவனுக்குப் பதில் சொல்ல நாவெழவில்லை.

## 117. குரங்கின் அளவு

மாமதுரை நடுவர் ஒருவர் தன் மேலதிகாரியைக் காண நேர்ந்தது. தங்கள் அலுவலகப் பணிகள் பற்றிப் பேசிய பின்



பிற காரியங்கள் குறித்து உரையாடினர். அந்த நேரத்தில் மேலதிகாரி, " உங்கள் பகுதியில் குரங்குகள் ஏராளம் உள்ள தாகக் கேள்விப்படுகிறேன். அந்தக் குரங்குகளின் அளவு பற்றி சற்றுச் சொல்லுங்களேன்" என்றார். நடுவர் "மிகப் பெரிய குரங்கு ஒரு பெரிய மனிதனின் அளவில் இருக்கும்" என்றார். பின் தான் வாய்குழறி உளறியதை உணர்ந்த அந்த நடுவர், தவற்றைத் திருத்திக் கொள்ளும் வகையில் "மிகச் சிறிய குரங்கு எனது அலுவலகத்தில் உள்ள கடைநிலை ஊழியனுக்கு இணையாக இருக்கும் என்றார்.

# 118. வானின் உயரம்

வானின் உயரம் பற்றி, மரத்தடி நிழலில் அமர்ந்து சிலர் வாதாடிக் கொண்டிருந்தனர். பல்வேறு விதமான கருத்துகள் சிலர் வாதாடிக் கொண்டிருந்தனர். பல்வேறு விதமான கருத்துகள் அங்கே முடிவின்றி தருக்கிக்கப்பட்டன. முடிவில் அவ்வழியே சென்ற சிற்றூர்வாசி ஒருவர் குறுக்கிட்டு "வானிற்கும் நிலத்துக்குமிடையே முந்நூறு முதல் நானூறு



கல்களுக்குள் இருக்கும். மெதுவாக ஏறினால் நான்கு நாள்கள் ஆகும். சற்று விரைந்து சென்றால் மூன்று நாள்கள் ஆகும். இங்கிருந்து சென்று மீண்டும் திரும்பிவரக் கூடுதல் ஆறு அல்லது ஏழு நாள்கள் ஆகும். இதைப்பற்றியேன் இவ்வளவு மும்முரமாக தருக்கித்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்றார்.

சிற்றூர்வாசியின் முடிவான விடை கேட்டுக் குழுமி இருந்தோர் வாயடைத்துப் போயினர். எப்படி இந்த முடிவுக்கு வந்தீர்கள் என்றனர். சிற்றூர்வாசி விளக்கினார், "வருண தெய்வத்திற்குத் தை மாதம் 14ம் நாள் வழியனுப்பு விழா கொண்டாடுவது உங்கள் அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். அத் தெய்வம் விண்ணகம் சென்று, மண்ணகக் கணக்கை இறைவனுக்கு தந்துவிட்டு, மண்ணகம் திரும்பு கிறார். மீண்டும் நிலவுலகில் அவரை வரவேற்க புத்தாண்டின் தொடக்கத்தில் விழா கொண்டாடுகிறோம். இவ்வாறு மண்ணகத்திலிருந்து விண்ணகம் சென்று மீண்டும் மண்ணகம் திரும்ப அதாவது 400 கல்கள் சென்று வர ஒர் ஆண்டு காலம் ஆகிறது" என்று.

இந்த விளக்கம் கேட்டு அனைவரும் நகைத்தனர். "உங்கள் விளக்கம் அற்புதம்; உங்களிடம் சிறந்த சொல்லாற்றல் உள்ளது" என்று அச்சிற்றூர் வாசியைப் பாராட்டினர்.

## 119. சோம்பேறி

சோம்பேறிப் பெண்ணொருத்தி அனைத்திற்கும் தன் கணவனையே சார்ந்திருந்தாள். உண்ணும் போது வாயை திறக்கின்ற வேலையையும், உடுத்தும்போது கையை தூக்கி நிற்கின்ற வேலையை மட்டுமே செய்து வந்தாள். ஒருசமயம் கணவன் பட்டணம் சென்று ஐந்து நாள்கள் தங்க நேர்ந்தது. அவளுக்கு உணவூட்டுவதற்காகக் கணவன் மிகப்பெரிய 'மாவடை' ஒன்றினைப் படைத்து அவற்றின் நடுவில் ஒரு பெரிய துளையிட்டு, அவள் கழுத்தில் மாட்டிவிட்டான்.


ஐந்து நாள்களுக்கு அந்த மாவடை போது மென்று அவன் கணித்தான். இவற்றைச் செய்தபின், அவன் பட்டணம் சென்றான். திரும்பிச் வந்தபோது அவன் மனைவி இறந்து மூன்று நாள் ஆகியிருந்ததை அறிந்தான். மாவடையில் அவள் வாய்க்கு எதிராக இருந்த பகுதிமட்டுமே சாப்பிடப்பட்டிருந்தது. எஞ்சிய பகுதிகள் அனைததும் தொடப்படாமல் அப்படியே விடப்பட்டிருந்தன.

## 120. கஞ்சனின் ஆவி

கஞ்சத்தனமான வாழ்கை வாழ்ந்தான் ஒரு மனிதன். உண்பது அரிது. அவனை எல்லோரும் கஞ்சனின் ஆவி என்று அழைத்தனர். ஒருநாள் படகுக் கூலி கொடுக்க மன மில்லாமல் ஆற்றின் குறுக்கே நடந்து செல்ல முயன்றான். நட்டாற்றில் வந்தபோது வெள்ளம் அவனை அடித்துச் செல்ல முனைந்தது. உதவிகோரிக் கதறினான். 200 பணம் முன்பணமாக தந்தால் காப்பாற்றுவதாகப் படகோட்டி ஒருவன் சொன்னான் 'நூறு பணம் போதாதா?'' என்று கேட்டான் கஞ்சன். இப்போது தண்ணீர் அவன் மார்பளவை எட்டியது. ''பின் 150 பணம் தந்தால் போதுமா?'' என்றான் கஞ்சன். படகோட்டி மறுத்தபோது கஞ்சன் தண்ணீரில் மூழ்கினான்.

'கஞ்சனின் ஆவி' என்று அழைக்கப்பட்ட அக் கஞ்சன் தற்போது உண்மையிலேயே ஆவி ஆகி மேலுலகம் சென்றான். நரக தேவன் அவனைப் பார்த்து முழங்கினன். ''கஞ்சனே பணம் தான் உன் வாழ்க்கை என்று நினைத்தாய்; ஒரு காசு கூட செலவு செய்ய மறுத்தாய்; இப்போது நரகத்தில்

கொதிக்கும் எண்ணெயில் ஏறியப்படவிருக்கிறாய்'' என்றான் நரகதேவன். அப்போது எண்ணெய் கொதிக்கும் ஓசை கேட்டது. தீயினை அவன் கண்களால் கண்டான் கஞ்சன். அந்த நிலையிலும் அவன் பேரம் பேசினான். "எவ்வளவு எண்ணெய்! ஏன் இப்படி வீணக்குகிறீர்கள்? அந்த எண்ணெய் குரிய பணத்தை என்னிடம் தந்தால்; எண்ணெய் இல்லாமலேயே என்னை வறுக்க நான்



ஒப்புக்கொள்கிறேன்'' என்றான் கஞ்சன்.

பின்னர் நரக தேவனின் ஏவலர்கள் அவனை இரும்பு முள்கரண்டியால் குத்திக் கொதிக்கும் எண்ணெயிலிட்டுக் கருக்கி வெளியே எடுத்து மீண்டும் நரக தேவனின் பார்வைக்குப் படைத்தனர். நரகதேவன் அதனைப் ஒரு முறை பார்த்துவிட்டுச் சொன்னான், இந்த மனிதன் ஒதுக்கப் பட வேண்டியவன். எனவே இவன் நாயாகவோ, பன்றியா கவோ மறுபிறவி எடுப்பானாக என்று சபித்தார்.

* * * * * * * *



புலவர் த. கோவேந்தன் டி.லிட் 1932

கோவேந்தன் பாடிக் குவிக்கின்றான் நாளடைவில்
பாவேந்தன் ஆய்விடுவான் பார்.

**- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் (1963)**

பல்லா யிரம்நூல் படித்தறியும் பண்பாளன்;
நல்லார் இணைக்கத்தின் நட்பாளன்; - வல்லான்
எழுதுகின்ற நூல்எல்லாம் இன்தமிழுக்கு ஏற்றம்;
தொழுகின்றேன் கோவேந்தன் தொண்டு.

***- அருட்கவி அரங்க சீனிவாசன் (1975)***